بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 7

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 12

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

20 ஷஃபான் 1443 ஹிஜ்ரி கமரி 24 அமான் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 24 மார்ச் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَقَدْ كُذِّبَتْ رُسُلٌ مِّنْ قَبْلِكَ فَصَبَرُوْا عَلٰى مَا كُذِّبُوْا وَاُوْذُوْا حَتّٰۤى اَتٰىهُمْ نَصْرُنَا ۚ وَلَا مُبَدِّلَ لِكَلِمٰتِ اللّٰهِ ۚ وَلَقَدْ جَآءَكَ مِنْ نَّبَاِى الْمُرْسَلِيْنَ

நிச்சயமாக உமக்கு முன்னர் வந்த தூதர்களும் பொய்ப்படுத்தப்பட்டனர். அவர்கள் பொய்ப்படுத்தப்பட்டதுடன், துன்புறுத்தப்பட்டிருந்தும் அவர்களுக்கு நம் உதவி வரும் வரை அவர்கள் பொறுமையாயிருந்தனர். அல்லாஹ்வின் வசனங்களை மாற்றுபவன் எவனுமில்லை. இத்தூதர்களின் செய்திகள் நிச்சயமாக உம்மிடம் வந்தே இருக்கின்றன. (6:35)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்த ஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## தற்போது வரை மஸீஹ் ஏன் வரவில்லை? என்று முஸ்லிம்கள் பைத்தியக்காரர்களைப் போன்று சுற்றித்திரிந்து தேடியிருக்க வேண்டும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

சிலுவை வணக்கம் உச்சத்தை தொட்டு விட்டது. உண்மையாளரை ஏளனம் செய்து அவமானப்படுத்துவது உச்சத்தை தொட்டு விட்டது. ஈக்களுக்கும், தேனீக்களுக்கும் கொடுக்கும் மரியாதை கூட (இஸ்லாத்தின் எதிரிகளால்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்படவில்லை. தேனீக்களையும், எறும்புகளையும் கண்டு கூட மனிதன் அஞ்சுகின்றான். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசிப் பேசுவதில் மனிதனுக்கு எந்த தயக்கமும் இல்லை. كَذَّبُوْا بِاٰيٰتِنَا (எமது அடையாளங்களை அவர்கள் பொய்ப்படுத்தினர்) என்பதை உண்மைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். எந்த அளவுக்கு வாய் திறந்து பேச முடியுமோ அந்த அளவிற்கு பேசியுள்ளனர். மிக மோசமாக திட்டித் தீர்த்துள்ளனர். தற்போது இறைவன் அதனை அகற்றுவதற்கான அந்த நேரம் உண்மையாகவே வந்து விட்டது. இதுபோன்ற நேரத்தில் அவன் எப்போதும் ஒரு மனிதரை அனுப்புகின்றான். وَلَنْ تَجِدَ لِسُنَّةِ اللّٰهِ تَبْدِيْلًا (அல்லாஹ்வின் செயல்முறையில் எந்த மாற்றத்தையும் நீர் ஒருபோதும் காண மாட்டீர்).

அவன் எப்படிப்பட்ட மனிதரை உருவாக்குகின்றான் என்றால் அவர் இறைவனின் மகத்துவம் மற்றும் கம்பீரத்திற்காக மிகவும் உத்வேகம் கொண்டிருக்கின்றார். மறைமுக உதவி அந்த மனிதருக்கு ஊன்றுகோலாக இருக்கின்றது. உண்மையில் அவை அனைத்தையும் இறைவனே செய்கின்றான். ஆனால் அவரைப் படைப்பது என்பது ஒரு சுன்னத்தை முழுமை செய்வதாக அமைகின்றது. தற்போது நேரம் வந்து விட்டது. தங்களது மார்க்கத்தில் வரம்பு மீற வேண்டாம் என்று இறைவன் திருக்குர்ஆனில் கிறிஸ்துவர்களுக்கு அறிவுரையை செய்திருக்கின்றான். ஆனால் அவர்கள் அதன்படி அமல் செய்யவில்லை. முதலில் அவர்கள் ضَآلِّيْنَ

(தொடர்ச்சி 12 வது பக்கம்...)

**நம்பிக்கையாளர் உடனடியாக தனது இடத்தை விட்டு விடக் கூடாது. மாறாக, தப்லீக் செய்து கொண்டிருக்க வேண்டும். மார்க்கத்தின்படி அமல் செய்வது அங்கு சாத்தியமே இல்லை என்ற நிலைக்கு மக்கள் நிர்பந்தத்திற்குள்ளாகி விடாத வரை தப்லீச் செய்து கொண்டிருக்க வேண்டும்.**

وَالَّذِيْنَ هَاجَرُوْا فِي اللّٰهِ مِنْۢ بَعْدِ مَا ظُلِمُوْا لَنُبَوِّئَنَّهُمْ فِي الدُّنْيَا حَسَنَةً (16:23)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா அன்–நஹ்லின் 42வது வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

فِي اللّٰهِ என்பதற்கு பல பொருள் கொள்ள முடியும்.

(1) ஃபீய் என்பது லாம் என்ற பொருளில் வரும்போது அவர்கள் அல்லாஹ்வுக்காக ஹிஜ்ரத் செய்தார்கள். அதைத் தவிர்த்து அவர்களுக்கு வேறு எந்த நோக்கமும் இருக்கவில்லை என்பது வசனத்தின் பொருளாக அமையும்.

ஹதீஸில் வந்துள்ளது. ஹிஜ்ரத் பல வகைப்படும். ஒருவர் மனைவிக்காக ஹிஜ்ரத் செய்கின்றார். ஒருவர் செல்வத்திற்காக, மற்றொருவர் இறைவனுக்காக ஹிஜ்ரத் செய்கின்றார்.

ஆக (நம்பிக்கையாளர்களாகிய) அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் இறைவனுக்காக மட்டுமே அவர்கள் ஹிஜ்ரத் செய்கின்றார்கள். முஸ்லிம்கள் பணத்திற்காக போர் புரிகின்றார்கள் என்று இன்று எதிரிகள் ஆட்சேபனை செய்கின்றார்கள். அதுபோன்ற ஆட்சேபனைகள் இறைவனின் தூய அடியார்கள் மீது செய்யப்படும் என்பதை மறைவான இறைவன் அறிந்திருந்தான். எனவே போர்கள் தொடங்குவதற்கு முன்னரே முதலில் இந்த ஆட்சேபனைக்கு அவன் பதிலளித்து விட்டான்.

(2) இதில் முஸாஃப் (இலக்கண விதி) கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. வாக்கியத்தை இவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும். فِيْ دِيْنِ اللّٰهِ அதாவது அவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக ஹிஜ்ரத் செய்கின்றார்கள்.

பொருள்: அவர்கள் மக்காவில் மார்க்கப் பணிகளை செய்வதற்கு நமக்கு சுதந்திரம் இல்லை. எனவே எங்கு சுதந்திரம் இருக்குமோ அங்கு நாட்டை துறந்து சென்று விடுவோம் என்பது அவர்களின் ஹிஜ்ரத்தின் நோக்கமாக இருக்கின்றது.

(தொடர்ச்சி 12 வது பக்கம்...)

## நபிமொழி

**மதீனா மீதான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பு**

1885: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவா! நீ மக்காவிற்கு வழங்கிய பரக்கத்தைப் போன்று இரண்டு மடங்கு பரக்கத்தை மதீனாவிற்கு வழங்குவாயாக.

1886: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பயணத்திலிருந்து ஊர் திரும்பும்போது மதீனாவி(ல் உள்ள விடுகளி)ன் சுவர்களைக் கண்டதும் தமது பெண் ஒட்டகத்தை விரைந்து செலுத்துவார்கள். வேறு ஒரு கால்நடையின் மீது அமர்ந்திருந்தால் அதனையும் மதீனாவின் மீதான அன்பினால் விரைந்து செலுத்துவார்கள்.

1887: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அறிவிக்கின்றார்கள்: பனூ ஸலிமா குலத்தினர் தமது இடத்தை விட்டு விட்டு மதீனாவிற்கு அருகே குடிபெயர விரும்பினார்கள். அப்போது மதீனாவின் ஏதாவது ஒரு பக்கம் இடம் காலியாவதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. எனவே பனூ சல்மா கூட்டத்தினரே! நீங்கள் (நடந்து வருவதற்கான) காலடிச் சுவடுகளின் நன்மைகளை நற்கூலியை விரும்பவில்லையா? என்று கேட்டார்கள். பின்னர் பனூ ஸலிமா குலத்தினர் (தாம் முன்பு வசித்துக் கொண்டிருந்த) அதே இடத்திலேயே தங்கி விட்டனர். (ஸஹீஹ் புகாரி தொகுதி 3, கிதாப் ஃபளாயிலுல் மதீனா – 2008 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர்*

*(திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை*

*04 & 11 பிப்ரவரி 2022 (முழுவதுமாக)*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04 பிப்ரவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு தப்லீக் மாதம் **04 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்றைய நாட்களில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. மேலும் சில போர்களைப் பற்றிய குறிப்பும் செய்யப்பட்டிருந்தது. பனூ குரைழா போர் என்ற ஒரு போர் நிகழ்ந்தது. வாகிதி அவர்கள் பனூ குரைழா போரில் பங்கு பெற்ற நபர்களின் பெயரை பதிந்துள்ளார்கள். அதன்படி பனூ தைம் கோத்திரத்திலிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) அவர்களும் பனூ குரைழா போரில் பங்கு பெற்றிருந்தார்கள்.

(கிதாபுல் மகாஸி தொகுதி 3 பக்கம் 4 – 2013 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்துர் ரஹ்மான் பின் கனம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பனூ குரைழாவை நோக்கி புறப்பட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் அன்னார் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மக்கள் தங்களை உலகியல் அழகைத் தரக்கூடிய ஆடைகளில் கண்டால் பின்னர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அவர்களிடம் அதிகமாகி விடும். எனவே ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் தங்கள் சமூகத்தில் முன் வைத்த அந்த மேலாடையை தாங்கள் அணிந்து கொள்ளுங்கள். இணை வைப்பவர்கள் தங்களை அழகிய ஆடையில் பார்க்க வேண்டும் என்பதற்காக தாங்கள் (ஸல்) அதனை அணிந்து கொள்ளுங்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் அவ்வாறு செய்வேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் இருவரும் எனக்காக ஏதாவதொரு விஷயத்தில் உடன்பட்டு விட்டால் நான் உங்களின் ஆலோசனைக்கு எதிராக செயல்பட மாட்டேன். எனது இறைவன் உங்களின் உதாரணத்தை எனக்கு இவ்வாறு எடுத்துரைத்துள்ளான். அதாவது வானவர்களில் ஜிப்ராயீல் மற்றும் மீகாயிலின் உதாரணத்தைப் போன்று உங்களின் உதாரணத்தை என்னிடம் எடுத்துரைத்துள்ளான்.

இப்னு கத்தாப் அவர்களைப் பொறுத்தவரை அவர்களின் உதாரணம் வானவர்களில் ஜிப்ராயீல் அவர்களைப் போன்றதாகும். அல்லாஹ் ஒவ்வொரு சமுதாயத்தையும் ஜிப்ராயீல் மூலமாகவே அழித்துள்ளான். மேலும் அவர்களின் உதாரணம் நபிமார்களில் ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களின் உதாரணத்தைப் போன்றதாகும். رَبِّ لَا تَذَرْ عَلَى الْاَرْضِ مِنَ الْكٰفِرِيْنَ دَيَّارًا என்று அன்னார் கூறினார்கள். எனது இறைவா! நிராகரிப்பாளர்களில் நீ எவரையும் பூமியில் விட்டு வைக்காதே.

இப்னு அபீ குஹாஃபா அவர்களின் உதாரணம் வானவர்களில் மீகாயீல் அவர்களைப் போன்றதாகும். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உதாரணமாகும். அவர்கள் பூமியிலுள்ள மக்களுக்காக பாவமன்னிப்பு வேண்டுகின்றார்கள். நபிமார்களில் அன்னாரின் உதாரணம் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் போன்றதாகும். அன்னார் இவ்வாறு கூறினார்கள்.

فَمَنْ تَبِعَنِيْ فَاِنَّهٗ مِنِّيْ وَمَنْ عَصَانِيْ فَاِنَّكَ غَفُوْرٌ رَّحِيْمٌ

எனவே எவர் என்னைப் பின்பற்றினாரோ நிச்சயமாக அவர் என்னைச் சார்ந்தவர் ஆவார். எவர் என்னை நிராகரித்து விட்டாரோ நிச்சயமாக நீ மிகவும் மன்னிக்கக் கூடியவனும், மீண்டும் மீண்டும் கருணை காட்டக் கூடியவனும் ஆவாய்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இருவரும் எனக்காக ஏதாவதொரு விஷயத்தில் ஒன்றுபட்டு விட்டால் நான் ஆலோசனையில் உங்களுக்கு எதிராக செயல்பட மாட்டேன். ஆனால் ஆலோசனையின் நிலையில் உங்கள் இருவரின் நிலை பலதரப்பட்டதாகும். உங்கள் இருவரின் நிலை ஜிப்ராயீல், மீகாயீல் மற்றும் நூஹ், இப்ராஹீம் (அலை) ஆகியோரின் உதாரணமாகும்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 7 பக்கம் 10 கிதாபுல் ஃபஸாயிலுஸ் சஹாபா அறிவிப்பு எண் 36132 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ குரைழாவை முற்றுகையிட்டிருந்தார்கள. அது தொடர்பாக ஓர் அறிவிப்பில் குறிப்பு இடம் பெற்றுள்ளது. ஆயிஷா பின்த் சஅத் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: சஅதே! முன்னேறிச் செல்லுங்கள். மேலும் அந்த மக்களின் மீது அம்புகளை எய்யுங்கள். எனது அம்பு அவர்களை சென்றடைந்து விடும் வரை நான் முன்னேறிச் சென்றேன். என்னிடத்தில் 50 ற்கும் அதிகமான அம்புகள் இருந்தன. அதனை நாங்கள் சில நிமிடங்களில் எய்து விட்டோம். எங்களுடைய அம்புகள் எண்ணிலடங்கா வெட்டுக் கிளிகளைப் போன்று வீசப்பட்டன. எனவே அந்த மக்கள் உள்ளே நுழைந்து விட்டனர். மேலும் அவர்களில் எவரும் வெளியே எட்டிப் பார்க்கவில்லை. நாங்களோ எங்களிடமிருந்த அனைத்து அம்புகளும் தீர்ந்து விடக் கூடாதே என்று அஞ்சத் தொடங்கினோம். எனவே நாங்கள் அவற்றில் சிலவற்றை எய்தோம். மேலும் சிலவற்றை எங்களிடம் பாதுகாப்பாக வைத்துக் கொண்டோம்.

ஹஸ்ரத் கஅப் பின் அம்ர் மஃஸனி (ரலி) அவர்களும் அம்பு எய்யக் கூடியவர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: அந்த நாளன்று என்னிடம் எத்தனை அம்புகள் இருந்ததோ அவை அனைத்தையும் நான் எய்து விட்டேன். எந்த அளவுக்கென்றால் இரவின் சில பகுதி கழிந்தபோது நாங்கள் அவர்கள் மீது அம்பு எய்துவதை நிறுத்தி விட்டோம்.

அன்னார் கூறுகின்றார்கள்: நாங்கள் அம்பு எய்து முடித்திருந்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது குதிரையின் மீது சவாரி செய்திருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் ஆயுதம் ஏந்தி இருந்தார்கள். அன்னாரை சுற்றிலும் குதிரை சவாரிகள் இருந்தனர். பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் எங்களுக்கு வழிகாட்டினார்கள். எனவே நாங்கள் தத்தமது இருப்பிடத்தின் பக்கம் திரும்பி வந்து விட்டோம். மேலும் நாங்கள் இரவை கழித்தோம். ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் அனுப்பி இருந்த பேரீத்தம் பழங்களே எங்களின் உணவாக இருந்தது. அந்த பேரீத்தம் பழங்கள் மிக அதிகமாக இருந்தன. நாங்கள் இரவில் அந்த பேரீத்தம் பழங்களிலிருந்து உண்டவாறு இரவைக் கழித்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அந்த பேரீத்தம் பழங்களை உண்டு கொண்டிருந்தது பார்க்கப்பட்டது. அப்போது பேரீத்தம் பழம் எவ்வளவு சிறந்த உணவாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி வந்தார்கள்.

(கிதாபுல் மகாஸி லில்வாகிதி தொகுதி 3 பக்கம் 6 – 2013 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் பனூ குரைழா தொடர்பாக தீர்ப்பு வழங்கியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை பாராட்டினார்கள். நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப தீர்ப்பு வழங்கியுள்ளீர்கள் என்று கூறினார்கள். அப்போது அல்லாஹ்வே! நீ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு குரைஷிகளுடன் வேறொரு போரை விதித்திருந்தால் என்னை அதற்காக உயிருடன் வைப்பாயாக. ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் குரைஷிகளுக்கு மத்தியில் போரை முடித்து விட்டால் எனக்கு மரணத்தை வழங்கி விடுவாயாக என்று ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அன்னாரின் காயம் சரியாகி விட்டது. உள்ளபடியே அன்னார் நலம் பெற்றிருந்தார்கள்.

அன்னாரின் காயத்தின் சிறிய அடையாளமே எஞ்சியிருந்தது. அன்னார் தமது கூடாரத்திற்கு திரும்பி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்காக அமைத்திருந்த கூடாரத்திற்கு திரும்பி வந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் அன்னாரிடத்தில் வருகை தந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எந்த இறைவனின் கட்டுப்பாட்டில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் உயிர் உள்ளதோ அந்த இறைவனின் மீது ஆணையாக! நான் எனது அறையில் இருந்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அழு குரலையும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அழு குரலையும் தனித்தனியானதாக அடையாளம் கண்டு கொண்டிருந்தேன். அதாவது ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் மரண படுக்கையில் இருந்த அந்த நேரத்தில் இவர்கள் இருவரும் அழுது கொண்டிருந்தார்கள். நான் எனது அறைகளில் இருந்தேன். கம்பீரமிக்க அல்லாஹ் கூறியதற்கேற்ப அவர்கள் இருந்தனர்.

رُحَمَآءُ بَيۡنَهُمۡ என்று அல்லாஹ் கூறினான். பொருள்: அவர்கள் தங்களுக்குள் ஒருவர் மற்றவர் மீது எல்லையற்ற அன்பு கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 256–259 அறிவிப்பு எண் 25610 – 1998 ஆம் ஆண்டு ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஹுதைபியா உடன்படிக்கை தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கனவில் கண்டார்கள். இது தொடர்பாக ஏற்கனவே குத்பாக்களில் கூறப்பட்டு விட்டது. அந்த கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் பைத்துல்லாஹ்வை வலம் வந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கனவின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1400 நபித்தோழர்களின் கூட்டத்துடன் ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு துல் கஃதா மாதத்தின் தொடக்கத்தில் திங்கட்கிழமை அன்று காலை நேரத்தில் மதீனாவிலிருந்து உம்ராவை நிறைவேற்றுவதற்காக புறப்பட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 749, 750)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மக்காவில் நுழைவதிலிருந்து தடுக்க வேண்டும் என்பதற்காக மக்கத்து காஃபிர்கள் ஆயத்தமாக உள்ளனர் என்ற தகவல் அன்னார் (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருந்தது. எனவே அன்னார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் ஆலோசனை செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆலோசனை வழங்கியவாறு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் உம்ரா செய்வதற்காக மட்டுமே வந்துள்ளோம். நாம் எவருடனும் போரிடுவதற்காக வரவில்லை. எனது கருத்து என்னவென்றால், நாம் நமது வீடுகளுக்கு திரும்பிச் சென்று விடுவோம். ஒருவர் பைத்துல்லாஹ்விலிருந்து நம்மை தடுப்பதற்கு முயற்சி செய்கின்றார் என்றால் பின்னர் நாம் அவருடன் போரிடுவோம் என்று கூறினார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 37 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹுதைபியா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது குரைஷிகள் சார்பாக சமரச பேச்சுவார்த்தைக்காக குழுக்களின் வருகையின் தொடர் ஆரம்பமானது. அப்போது உர்வா அன்னார் (ஸல்) அவர்களிடம் வருகை தந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உரையாடத் தொடங்கினார். முஹம்மது (ஸல்) அவர்களே! நீங்கள் எனக்கு ஒன்றை கூறுங்கள். நீங்கள் உங்களது சமுதாயத்தை முற்றிலும் அழித்து விட்டால் உங்களுக்கு முன்னால் தமது சமுதாய மக்களையே அழித்து விட்ட யாராவது ஒரு அரபியைப் பற்றி செவிமடுத்துள்ளீர்களா? ஒருவேளை மற்றொரு விஷயம் நடந்து விட்டால் அதாவது குரைஷிகள் வெற்றி பெற்று விட்டால் நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். இங்கிருந்தும், அங்கிருந்தும் ஒன்றுகூடியுள்ள உமது தோழர்களின் முகங்களைப் நான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அவர்கள் ஓடி விடுவார்கள். உம்மை விட்டு விடுவார்கள்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உர்வா பின் மசூது அவர்களிடம் மிகவும் கோபமான சொற்களில் இவ்வாறு கூறினார்கள். செல்லும்; செல்லும். சென்று உமது லாத் சிலையை முத்தமிட்டுக் கொண்டு திரியும். அதாவது அதனை வணங்கும். அப்போது இவர் யார் என்று உர்வா கேட்டார். அபூபக்ர் (ரலி) என்று மக்கள் கூறினர். அதற்கு உர்வா கூறினார்: பாருங்கள். எந்த இறைவனின் கையில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவனின் மீது ஆணையாக! உம்முடைய நன்மை என் மீது இல்லாமல் இருந்திருந்தால் இதற்குள் நான் உங்களுக்கு பதிலடி கொடுத்திருப்பேன். நான் இதற்கு பதில் கொடுத்திருப்பேன்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்செய்த நன்மை இவ்வாறு இருந்தது. அதாவது ஒரு விவகாரத்தில் உர்வாவிற்கு ஈட்டுத் தொகை கட்டாயமாகி இருந்தது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் 10 பெண் ஒட்டகங்கள் மூலம் அவருக்கு உதவி செய்தார்கள். எவ்வாறிருப்பினும் உர்வா இந்த விஷயத்தை கூறிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பேசத் தொடங்கி விட்டார்.

ஹுதைபியா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷியர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். தாங்கள் அல்லாஹ்வின் உண்மையான நபி இல்லையா? என்று கேட்டேன். அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள் ஏன் இல்லை? என்று கூறினார்கள். நாம் உண்மையிலும், நமது எதிரிகள் பொய்யிலும் இல்லையா? என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏன் இல்லை என்று கூறினார்கள். நான் கூறினேன்: அப்படியென்றால் பிறகு நாம் ஏன் நமது மார்க்க விவகாரத்தில் இழிவான நிபந்தனைகளை ஒப்புக் கொள்ள வேண்டும்? அதற்கு நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன். நான் அவனுக்கு கட்டுப்படாமல் இருக்க மாட்டேன். மேலும் அவன் எனக்கு உதவி செய்வான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது (நிராகரிப்பாளர்களின்) நிபந்தனைகளை ஒப்புக் கொள்கிறேன் என்றால் இது அல்லாஹ்வின் கட்டளைக்கு கீழ்ப்படியாமை அல்ல. அவன் எனக்கு உதவி செய்வான் என்று கூறினார்கள்.

நான் கூறினேன்: அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நாம் மிக விரையில் பைத்துல்லாஹ்வை சென்றடைவோம். மேலும் அதனை வலம் வருவோம் என்று தாங்கள் (ஸல்) அவர்கள் எங்களிடம் கூறியிருக்கவில்லையா? அதற்கு நிச்சயமாக நான் கூறி இருந்தேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நாம் இந்த வருடமே பைத்துல்லாஹ்வை சென்றடைவோம் என்று நான் உங்களுக்கு கூறி இருந்தேனா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். நாம் இந்த வருடம் நிச்சயம் பைத்துல்லாஹ்வை சென்றடைவோம் என்று கூறியிருக்கவில்லையே!

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். இல்லை. தாங்கள் அவ்வாறு கூறவில்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது நிச்சயம் நீங்கள் பைத்துல்லாஹ்வை சென்றடைவீர்கள். அதனை தவாஃபும் செய்வீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதைக் கேட்ட பிறகு நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அபூபக்ர் (ரலி) அவர்களே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையிலேயே அல்லாஹ்வின் நபி இல்லையா? என்று நான் கேட்டேன். அதற்கு ஏன் இல்லை? என்று அன்னார் கூறினார்கள். நாம் உண்மையாளர்கள் இல்லையா? நமது எதிரிகள் பொய்யர்கள் இல்லையா? என்று நான் கேட்டேன். அதற்கு ஏன் இல்லை? என்று அன்னார் கேட்டார்கள். அப்படியென்றால், நாம் நமது மார்க்கத்தை குறித்து இழிவான நிபந்தனைகளை ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று கேட்டேன். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இறை அடியாரே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிச்சயம் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள். தூதர் தமது இறைவனுக்கு மாறு செய்வதில்லை. அல்லாஹ் நிச்சயம் அன்னாருக்கு உதவி செய்வான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஏறக்குறைய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்த அதே சொற்களையே கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முடிவு செய்துள்ள உடன்படிக்கைகளை உறுதியுடன் பிடித்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் (ஸல்) நிச்சயம் உண்மையில் நிலைபெற்றுள்ளார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாம் நிச்சயம் பைத்துல்லாஹ்வை சென்றடைவோம். மேலும் அதனை வலம் வருவோம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மிடம் கூறியிருக்கவில்லையா? என்று நான் கேட்டேன். நிச்சயமாக என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆனால் நீங்கள் இந்த வருடமே அங்கு சென்றடைவீர்கள் என்று ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்களா? என்று கேட்டார்கள். அதற்கு இல்லை என்று, தான் கூறியதாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அப்போது அப்படியென்றால், நிச்சயம் நீங்கள் அங்கு செல்வீர்கள். மேலும் அதனை தவாஃப் செய்வீர்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஸுஹரி கூறினார்: நான் அந்த தவறின் காரணமாக அதற்கு பரிகாரமாக பல நன்மைகளை செய்தேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்.

(சஹீஹ் புகாரி, கிதாபுஷ் ஷரூத் ஹதீஸ் எண் 2731, 2732)

இதே சமாதான உடன்படிக்கையை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள். அதாவது உர்வா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து நின்றார். அன்னார் (ஸல்) அவர்களுடன் உரையாடத் தொடங்கினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கு முன்பு புதைல் பின் வர்காவிற்கு முன்னர் ஆற்றிய சொற்பொழிவை மீண்டும் அவருக்கு முன்னால் நிகழ்த்தினார்கள். உர்வா அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். ஆயினும் குரைஷிகளின் தூதுவர் என்ற உரிமையை நிறைவேற்றுவதற்காகவும், அவர்களுக்கு ஆதரவாக அதிகம் அதிகமான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனும் இவ்வாறு கூறினார்.

முஹம்மது (ஸல்) அவர்களே! நீங்கள் இந்தப் போரில் உங்களது சமுதாயத்தை அழித்து விட்டால் பின்னர் நான் ஒன்றை கேட்கின்றேன். அரேபியர்களில் உங்களுக்கு முன்னர் இதுபோன்று அநீதியிழைத்த ஒரு நபரின் பெயரை நீங்கள் செவிமடுத்துள்ளீர்களா? ஒருவேளை வேறொரு விஷயம் நடந்தால் அதாவது குரைஷிகள் வெற்றி பெற்று விட்டால் இறைவன் மீது ஆணையாக! உங்களை சுற்றி இருக்கின்ற கூட்டத்தினரின் முகம் எனக்கு எப்படிப்பட்டதாக தென்படுகிறது என்றால் அவர்கள் தாமதிக்காமல் ஓடி விடுவார்கள். இந்த அனைத்து மக்களும் உம்மை விட்டு விடுவர் என்று அவர் கூறினார்.

அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகிலேயே அமர்ந்திருந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உர்வாவின் இந்த சொற்களை கேட்டு விட்டு கோபத்தால் நிறைந்து விட்டார்கள். மேலும் கூறினார்கள்: செல்லும். செல்லும்! சென்று லாத் எனும் சிலையை முத்திமிட்டு திரியும். நாங்கள் இறைவனின் தூதரை விட்டு விட்டு ஓடிவிடுவோமா? என்றும் அன்னார் (ரலி) கேட்டார்கள்.

லாத் சிலை என்பது பனூ சகீஃப் என்ற கோத்திரத்தின் ஒரு பிரபலமான சிலையாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கூற்றின் பொருள் என்னவாக இருந்ததென்றால் நீங்கள் சிலை வணங்கிகள் ஆவீர்கள். நாங்கள் ஏக இறைவனை வணங்கக் கூடியவர்கள் ஆவோம். அவ்வாறிருக்க சிலைகளுக்காக நீங்கள் பொறுமையையும், உறுதிப்பாட்டையும் காட்டும்போது, ஏக இறைவனின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை விட்டு விட்டு ஓடி விடுவது சாத்தியமா என்ன?

உர்வா மிகவும் கோபமடைந்து இந்த நபர் யார் என்று கேட்டார். எனது இந்த பேச்சை முறிக்கக் கூடிய இந்த மனிதர் யார் என்று கேட்டார். இவர் அபூபக்ர் (ரலி) என்று மக்கள் கூறினர். அபூபக்ர் என்ற பெயரைக் கேட்டவுடன் உர்வாவின் கண்கள் வெட்கத்தால் பார்வையை தாழ்த்திக் கொண்டன. அபூபக்ரே! உமது ஒரு பெரும் நன்மை என் மீது இல்லையென்றால் (நடப்பது வேறு) என்று கூறினார். இங்கும் அதே குறிப்பு தான் இடம் பெற்றுள்ளது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு முறை அவரது கடனை திருப்பிச் செலுத்துவதற்கு உதவி செய்து அவரது உயிரை காப்பாற்றி இருந்தார்கள். இறைவன் மீது ஆணையாக! அந்த நன்மை இல்லையென்றால் நீங்கள் கூறிய விஷயத்திற்கு எவ்வாறு பதில் கொடுக்க வேண்டும் என்பதை நான் இப்போது கூறியிருப்பேன் என்று உர்வா கூறினார்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 756, 757)

புகாரியின் ஒரு சான்று பதியப்பட்டுள்ளது. அதாவது ஹுதைபியா உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் குரைஷியர்கள் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தார்கள். நிபந்தனைகள் தீர்மானிக்கப்பட்டு விட்டன. அந்த நேரத்தில் சுஹைல் பின் அம்ர் அவர்களின் மகனாகிய ஹஸ்ரத் அபூஜந்தல் விலங்குகளால் கட்டப்பட்டிருந்த நிலையில் தடுமாறியவாறு அங்கு வந்தடைந்தார். மக்காவின் சார்பாக தூதுவராக சுஹைல் பின் அம்ர் வந்திருந்தார். அவர் அன்னாரை திருப்பி அனுப்பும்படி கோரிக்கையை முன் வைத்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை குரைஷியர்களிடம் திருப்பி ஒப்படைத்து விட்டார்கள்.

(சஹீஹ் புகாரி, கிதாபுஷ் ஷரூத், ஹதீஸ் எண் 2731, 2732)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இதன் சில விவரங்களை எடுத்துரைத்துள்ளார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தர்க்கம் செய்தவாறு தாங்கள் அல்லாஹ்வின் உண்மையான தூதர் என்றால் பின்னர் நாம் ஏன் இவ்வாறு இறங்கிச் சென்று பேச வேண்டும் என்ற கூற்றும் அதில் இடம் பெற்றுள்ளது. எவ்வாறிருப்பினும் அதன் விளக்கம் இதுவாகும். அதாவது அபூஜந்தல் அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த கூற்றை கூறினார்கள்.

முஸ்லிம்கள் அந்த காட்சியை கண்டு கொண்டிருந்தனர். அபூஜந்தல் மீது அநீதியிழைக்கப்பட்டுக் கொண்டிருந்த அந்த காட்சியை கண்டு கொண்டிருந்தனர். மார்க்க தன்மானத்தின் காரணமாக அவர்களின் கண்களில் இரத்தம் வந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை அமைதிப்படுத்தி விட்டார்கள். இறுதியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்று நடுங்கிய குரலில் தாங்கள் இறைவனின் உண்மையான தூதர் இல்லையா? என்று கேட்டார்கள். ஆம்! நிச்சயம் ஆவேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நாம் உண்மையாளர்கள் இல்லையா? நமது எதிரிகள் பொய்யர்கள் இல்லையா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கேட்டார்கள். ஆம்! நிச்சயம் நாம் அவ்வாறே ஆவோம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு விஷயம் அப்படியென்றால், நாம் நமது உண்மையான மார்க்கத்தின் விவகாரத்தில் இந்த இழிவை ஏன் சகித்துக் கொள்ள வேண்டும்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நிலையைப் பார்த்து சுருக்கமான சொற்களில் கூறினார்கள்: பாருங்கள் உமரே! நான் இறைவனின் தூதர் ஆவேன். நான் இறைவனின் விருப்பத்தை அறிகின்றேன். அதற்கெதிராக என்னால் நடக்க முடியாது. அவனே எனது உதவியாளன் ஆவான் என்று கூறினார்கள். ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பில் கோபம் ஒவ்வொரு நொடிப்பொழுதும் அதிகரித்துக் கொண்டிருந்தது. எனவே நாம் பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்வோம் என்று தாங்கள் எங்களிடம் கூறவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு ஆம்! நிச்சயமாக நான் கூறி இருந்தேன். ஆனால் இந்த வருடமே நிச்சயம் நாம் தவாஃப் செய்வோம் என்று நான் கூறி இருந்தேனா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். இல்லை. அவ்வாறு கூறியிருக்கவில்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள். அப்படியென்றால் காத்திருங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். நிச்சயம் நீங்கள் மக்காவிற்குள் நுழைவீர்கள். இன்ஷா அல்லாஹ். கஃபாவையும் வலம் வருவீர்கள்.

ஆயினும் அந்த உணர்ச்சி மிகுதியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கென ஒரு சிறப்பான திகில் இருந்தது. எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கிருந்து விலகிச் சென்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அன்னாரிடமும் இதேபோன்று உணர்ச்சிமிகுதியால் பேசினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அதேபோன்றே பதிலளித்தார்கள். ஆனால் அத்துடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவுரையின் வடிவில், பாருங்கள் உமரே! சற்று நிதானமாக செயல்படுங்கள் என்று கூறினார்கள். மேலும் இறைத்தூதரின் கயிற்றை நீர் உமது கையில் பிடித்து வைத்துள்ளீர்கள். அதனை ஒருபோதும் விட்டு விடாதீர்கள். ஏனென்றால் இறைவன் மீது ஆணையாக! இந்த நபர் அதாவது எவரின் கரத்தில் நாம் நமது கரத்தை கொடுத்துள்ளோமோ அவர் நிச்சயமாக எவ்வாறிருப்பினும் உண்மையாளர் ஆவார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அந்த நேரத்தில் உணர்ச்சி மிகுதியால் இந்த அனைத்து விஷயங்களையும் கூறி இருந்தேன். இருப்பினும் பின் நாட்களில் எனக்கு மிகவும் வெட்கம் ஏற்பட்டது. நான் தவ்பா செய்தவாறு அந்த பலவீனத்தின் தாக்கத்தை கழுவுவதற்காக ஏராளமான உபரியான அமல்களை செய்தேன். அதாவது தான தர்மங்கள் செய்தேன். நோன்புகள் நோற்றேன். நஃபில் தொழுகைகளை தொழுதேன். எனது இந்த

பலவீனத்தின் கறை கழுவப்பட வேண்டும் என்பதற்காக அடிமைகளையும் விடுதலை செய்தேன்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 767, 768)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹுதைபியா உடன்படிக்கை சம்பவங்களை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஃபத்துல்லாஹ்வை வலம் வருவதற்காக சென்றிருந்தார்கள். அப்போது மக்கத்து காஃபிர்கள் இந்த செய்தியை அறிந்து தமது ஒரு தலைவரை அன்னார் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். இந்த வருடம் தாங்கள் தவாஃப் செய்வதற்காக வர வேண்டாம் என்று அவர் கூறினார். அந்த தலைவர் அன்னார் (ஸல்) அவர்களிடம் வந்து பேசத் தொடங்கினார். பேசும் சமயத்தில் அன்னார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முடியை அவர் தொட்டவாறு தாங்கள் இந்த முறை தவாஃப் செய்ய வேண்டாம். அடுத்த வருடத்திற்கு ஒத்தி வையுங்கள் என்று கூறினார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆசியாவைச் சேர்ந்த மக்களின் நடைமுறை இதுவாகும். அதாவது ஒருவரை தமது கூற்றை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று விரும்பும்போது அவர்கள் அவரின் தாடியை தொடுவார்கள். அல்லது தமது தாடியில் கை வைத்து இவ்வாறு கூறுவார்கள். பாருங்கள்! நான் முதியவர் ஆவேன். மேலும் நான் சமுதாயத்தின் தலைவர் ஆவேன். எனது பேச்சை கேளுங்கள் என்று கூறுவார்கள். எனவே அந்தத் தலைவரும் ஒரு கோரிக்கையாக அன்னார் (ஸல்) அவர்களின் தாடியை தொட்டு விட்டார். இதைப் பார்த்த ஒரு சஹாபி முன்னால் சென்றார். மேலும் தனது வாளை ஏந்திக் கொண்டு அந்த தலைவரிடம் கூறினார். உமது அசுத்தமான கையை கீழே போடு என்று கூறினார். வாள் ஏந்தி நிற்கக் கூடிய அந்த நபரை அடையாளம் கண்டவாறு தலைவர் கூறினார்: இன்ன சந்தர்ப்பத்தில் நான் உதவி செய்த அதே நபர் நீர் தானே என்று அவர் கேட்டார். இதைக்கேட்ட அந்த சஹாபி மௌனமாகி விட்டார். மேலும் பின்வாங்கி விட்டார். பின்னர் ஒரு கோரிக்கையின் அடையாளமாக அவர் அன்னார் (ஸல்) அவர்களின் தாடியை தொட்டார். அந்தத் தலைவர் இவ்வாறு தொடுவதைக் கண்டு எங்களுக்கு கடும் கோபம் வந்து கொண்டிருந்தது. ஆனால் அந்தத் தலைவரின் நன்மையை பெற்றிராத எந்தவொரு நபரும் அப்போது எங்களுக்கு தென்படவில்லை என்று சஹாபிகள் கூறினர்.

மேலும் இந்தத் தலைவரின் நன்மையை பெற்றிராத ஒரு நபர் நமக்கு தென்பட வேண்டுமே என்று எங்கள் உள்ளம் விரும்பியது. அதற்குள் எங்களிலிருந்து ஒருவர் முன்னோக்கி சென்றார். அவர் தலையிலிருந்து கால் வரை ஆடையால் மூடுப்பட்டிருந்தார். மிக உத்வேகத்துடன் அந்த தலைவரை நோக்கி, சற்று பின்னால் வாரும். உமது அசுத்தமான கையை அகற்றி விடும் என்று கூறினார். அந்த நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னாரே இவ்வாறு கூறி இருந்தார்கள். அந்த தலைவர் அன்னாரை அடையாளம் கண்டு கொண்டபோது, உம்மை என்னால் எதுவும் கூற முடியாது. ஏனென்றால் உம் மீது எனது எந்த நன்மையும் இல்லை என்று கூறினார்.

(ஹிந்துஸ்தானி உல்ஜனூ கா ஆஸான் தரீக் ஹல், ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 560)

ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு ஸில்கஃதா மாதத்தில் ஹுதைபியா உடன்படிக்கை சந்தர்ப்பத்தில் உடன்படிக்கை எழுதப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் இரண்டு நகல்கள் தயார் செய்யப்பட்டன. இரு தரப்பிலும் சாட்சிகளாக ஏராளமான கண்ணியத்திற்குரிய நபர்கள் அதில் கையொப்பமிட்டிருந்தனர். முஸ்லிம்கள் சார்பாக கையொப்பமிட்ட நபர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி), ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூஉபைதா பின் ஜராஹ் (ரலி) ஆகியோர் இருந்தனர். இது சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 769)

இஸ்லாத்தில் ஹுதைபியா உடன்படிக்கையை விட வேறொரு மாபெரும் வெற்றி இருக்கவில்லை என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 64 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பனூ ஃபஸாராவை நோக்கி சென்ற போரில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றி இந்த குறிப்பு எழுதப்பட்டுள்ளது. இந்தப் போர் ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு நடைபெற்றது. பனூ ஃபஸாரா நஜத் மற்றும் வாதியுல் குராவில் வசித்து வந்தார்கள்.

(சீரத் ஃபர்ஹின்ங் பக்கம் 64 – 2003 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது

தப்காத்துல் குப்ரா மற்றும் சீரத் இப்னு ஹஷ்ஷாம் ஆகிய நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. இந்தப் படை ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் அனுப்பப்பட்டிருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 69 – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

ஆனால் சஹீஹ் முஸ்லிம் மற்றும் சுனன் அபீ தாவூது ஆகிய ஹதீஸ் நூல்களிலிருந்து நமக்கு தெரிய வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை இந்தப் போருக்கு அமீராக நியமித்திருந்தார்கள். எனவே சஹீஹ் முஸ்லிமில் இந்த அறிவிப்பு கிடைக்கின்றது. அதாவது இயாஸ் பின் சலமா அறிவிக்கின்றார்கள்: எனது தந்தையார் என்னிடத்தில் கூறினார்: நாங்கள் ஃபஸாரா கோத்திரத்துடன் போர் புரிந்தோம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களது அமீராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னார் (ரலி) அவர்களை எங்களுக்கு அமீராக ஆக்கி இருந்தார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜிஹாத்... ஹதீஸ் எண் 4573 & சுனன் அபீ தாவூது, கிதாபுல் ஜிஹாத்... ஹதீஸ் எண் 2697)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் (ரலி) அவர்களும் இந்த போரைக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளின் ஒரு சிறிய படையை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தலைமையில் பனூ ஃபஸாராவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அந்தக் கோத்திரம் அந்த நேரத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்திருந்தது. அந்தப் படையில் சலமா பின் அக்வாவும் இணைந்திருந்தார்கள். அன்னார் மிகவும் பிரபலமான அம்பு எய்யக் கூடியவராகவும், ஓட்டத்தில் சிறப்பு புலமை பெற்றவராகவும் இருந்தார்கள்.

சலமா பின் அக்வா அறிவிக்கின்றார்கள்: நாங்கள் சுபுஹ் தொழுகைக்கு அருகில் அந்த கோத்திரத்தின் இருப்பிடத்தை சென்றடைந்தோம். நாங்கள் தொழுகையை முடித்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தாக்குதல் நடத்தும்படி எங்களுக்கு கட்டளையிட்டார்கள். நாங்கள் ஃபஸாரா கோத்திரத்துடன் போரிட்டவாறு அவர்களின் நீரூற்றை சென்றடைந்தோம். இணை வைப்பவர்களின் பல நபர்கள் கொல்லப்பட்டனர். அதன் பிறகு அவர்கள் மைதானத்தை விட்டு விட்டு ஓடி விட்டார்கள். நாங்கள் பல நபர்களை கைது செய்து விட்டோம்.

சலமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: தப்பியோடிய மக்களில் குழந்தைகள் மற்றும் பெண்களின் ஒரு கூட்டமும் இருந்தது. அவர்கள் வெகு விரைவாக அருகிலிருந்த ஒரு மலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கும், மலைக்கும் மத்தியில் அம்புகளை வீசத் தொடங்கினேன். அப்போது அந்த குழுவினர் அச்சமடைந்து நின்று விட்டனர். நாங்கள் அவர்களை கைது செய்து விட்டோம். அந்த கைதிகளில் வயது முதிர்ந்த ஒரு பெண்மணியும் இருந்தார். அவர் தம் மீது சிவப்பு நிற தோலால் ஆன போர்வையையும் போர்த்தி இருந்தார். அவரது ஓர் அழகிய மகளும் அவருடன் இருந்தார். நான் அவர்கள் அனைவரையும் சுற்றி வளைத்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அழைத்து வந்தேன். அன்னார் (ரலி) அவர்கள் அந்த பெண்ணை எனது மேற்பார்வையில் வழங்கி விட்டார்கள். பின்னர் நாங்கள் மதீனா வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடமிருந்து அந்தப் பெண்ணை பெற்றுக் கொண்டார்கள். மேலும் அவரை மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். அதாவது மக்கா வாசிகளிடம் கைதிகளாக இருந்த சில முஸ்லிம்களை விடுதலை செய்வதற்காக அந்தப் பெண்ணை அனுப்பி வைத்து விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 716, 717)

அந்தப் பெண்ணிற்கு பகரமாக மக்காவாசிகள் கைது செய்திருந்த நபர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

கைபர் போர் குறித்து குறிப்பு கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் கைபரை நோக்கி சென்றார்கள். கைபர் என்ற பள்ளத்தாக்கு மதீனாவிலிருந்து 182 கி.மீ தொலைவில் வடக்கில் அமைந்துள்ளது. அங்கு யூதர்களின் ஏராளமான கோட்டைகள் இருந்தன. அவற்றில் சிலவற்றின் அடையாளங்கள் தற்போதும் எஞ்சியுள்ளன. அந்த கோட்டைகளை முஸ்லிம்கள் கைபர் போரின்போது வெற்றி கொண்டிருந்தனர். இந்தப் பகுதி மிகவும் பசுமையானதும், யூதர்களின் மாபெரும் தலைநகரமாகவும் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்குப் பிறகு மதீனாவில் ஸிபா பின் உர்ஃபதா கிஃபாரி அவர்களை அமீராக நியமித்தார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 3 பக்கம் 144 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

கைபரில் கோட்டைகள் பத்து இரவுகளுக்கு மேலாக முற்றுகையிடப்பட்டிருந்தது.

(அல்மவாஹிப் லித்துன்யா தொகுதி 1 பக்கம் 517 கஸ்வா கைபர் – 2004 ஆம் ஆண்டு இஸ்லாமி அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் புரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தலை வலி ஏற்பட்டு வந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வெளியில் வருகை தராமல் இருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் கைபரை சென்றடைந்தபோது அன்னாருக்கு தலை வலி ஏற்பட்டது. எனவே அன்னார் (ஸல்) அவர்கள் மக்களிடத்தில் வெளியே வருகை தரவில்லை. அன்னாருக்கு தலைவலி ஏற்பட்டது. அதனை Migraine என்று கூறுவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை கதீபாவின் கோட்டைகளை நோக்கி அனுப்பினார்கள். எனவே அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கொடியை வாங்கினார்கள். மேலும் எதிரிகளை கடுமையாக எதிர்த்து போரிட்டார்கள். கடுமையான சண்டை நிகழ்ந்தது. பின்னர் திரும்பி வந்து விட்டார்கள். வெற்றி கிடைக்கவில்லை. ஆயினும் அவர்கள் மிகவும் முயற்சி செய்தார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். அன்னாரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை வாங்கினார்கள். கடுமையாக போரிட்டார்கள். முந்தைய போரை காட்டிலும் கடுமையாக போரிட்டார்கள். பின்னர் அன்னார் (ரலி) அவர்களும் திரும்பி வந்தார்கள். எனினும் வெற்றி கிடைக்கவில்லை.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 124 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Naib Ameer, Melapalayam)

வரலாறு மற்றும் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட பெரும்பாலான நூல்களில் நமக்கு இந்த குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் ஒருவருக்கு பிறகு ஒருவராக படையின் அமீராக ஆக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களின் கரங்களால் கோட்டை வெற்றி கொள்ள முடியாமல் போனது.

எனினும் ஸய்யிதுனா சித்தீக் அக்பர் என்ற ஒரு நூல் உள்ளது. அது லாஹூரிலிருந்து பிப்ரவரி 2010 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. ஆய்வு செய்யக் கூடிய நம்மவர்கள் அதனை பார்த்து விட்டு எனக்கு இவ்வாறு எழுதியுள்ளனர். அந்த நூலின் நூலாசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார்: அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கரங்களால் அந்த கோட்டை வெற்றி கொள்ளப்பட்டது. எனினும் அந்த நூலாசிரியர் அதற்கு எந்தவொரு சான்றையும் வழங்கவில்லை.

எவ்வாறிருப்பினும் நூலாசிரியர் எழுதுகின்றார்: ஒரு கோட்டையை வெற்றி கொள்வதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படையின் அமீராக சென்றார்கள். மேலும் அன்னாரின் மூலமாக வெற்றி நிகழ்ந்தது. இரண்டாவது கோட்டையை கைப்பற்றுவதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அன்னாரும் வெற்றி பெற்றார்கள். மூன்றாவது கோட்டையை கைப்பற்றுவதற்கான போரில் முஹம்மது பின் முஸ்லிமா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அன்னாரால் அதில் வெற்றி பெற முடியவில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: காலையில் நான் எப்படிப்பட்ட ஒரு நபரை அமீராக நியமித்து அவரிடம் கொடியை கொடுப்பேன் என்றால் இறைவனையும், அவரது தூதரையும் அவர் மிகவும் நண்பனாக ஆக்கிக் கொண்டுள்ளார். மேலும் அவரது கைகளில் கோட்டை வெற்றி கொள்ளப்படும். எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு கொடி வழங்கப்பட்டது. கமூஸ் என்ற கோட்டை வெற்றி கொள்ளப்பட்டது.

(அல்ஹாஜ் ஹகீம் குலாம் நபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா சித்தீக் அபூபக்ர் (ரலி) என்ற நூல் பக்கம் 49 – லாஹூரில் அச்சிடப்பட்டது)

கைபர் போர் தொடர்பாக வாகிதி ஓர் அறிவிப்பை செய்துள்ளார். ஏனென்றால் மக்கள் இதன் வரலாற்றையும் படிப்பார்கள். எனவே அதனையும் கூறி விடுகின்றேன். ஆயினும் இது 100 சதவிகிதம் சரியாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. எவ்வாறிருப்பினும் அவர் எழுதுகின்றார்:

கைபர் போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு சஹாபி ஹஸ்ரத் குப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களிடத்தில் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! பேரீத்தம் மரங்களை யூதர்கள் தங்களது இளம் பிள்ளைகளை விட அதிகம் நேசிக்கின்றனர். தாங்கள் அவர்களின் பேரீத்தம் மரங்களை வெட்டி விடுங்கள் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேரீத்தம் மரங்களை வெட்டுவதற்கு கட்டளையிட்டார்கள். முஸ்லிம்கள் வேகமாக பேரீத்தம் மரங்களை வெட்டத் தொடங்கி விட்டார்கள்.

இதுவரை கூறப்பட்ட விஷயம் 100 சதவிகிதம் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக இருக்க முடியாது. இருப்பினும் அடுத்த பகுதி சரியானதாக தோன்றுகின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நிச்சயமாக கண்ணியமும், வல்லமையும் மிக்க அல்லாஹ் கைபர் வெற்றிக்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான். மேலும் அவன் தனது வாக்குறுதியை முழுமை செய்யக் கூடியவன் ஆவான். தாங்கள் பேரீத்த மரங்களை வெட்டாதீர்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கு கட்டளையிட்டார்கள். அன்னார் (ஸல்) அவர்களின் அறிவிப்பாளர் இதனை அறிவித்தார். மேலும் பேரீத்தம் மரங்களை வெட்டுவதிலிருந்து தடை செய்து விட்டார்கள்.

(கிதாபுல் மகாஸி லில்வாகிதி தொகுதி 2 பக்கம் 120 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கைபர் வெற்றியை வழங்கியபோது அன்னார் (ஸல்) அவர்கள் கைபரின் ஒரு சிறப்பான கதீபா என்ற பள்ளத்தாக்கை தமது உறவினர்கள், தமது குடும்பத்தின் பெண்கள், முஸ்லிம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பங்கிட்டு கொடுத்து விட்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏனைய உறவினர்களுக்கு மட்டுமின்றி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் 100 வஸ்க் எனும் அளவிலான தானியங்களையும், பேரீத்தம் பழங்களையும் வழங்கினார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லி இப்னீ ஹிஷாம் பக்கம் 707 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒரு வஸ்க் என்பது 60 சாஹ் ஆகும். ஒரு சாஹ் என்பது 2.5 கிலோ ஆகும்.

(லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 4 பக்கம் 487)

இவ்வாறு சுமார் 375 மன் அளவிலான தானியங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் பங்கில் வந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நஜ்த் பக்கம் சென்ற போரைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: நஜ்த் என்பது பாதி பாலைவன பகுதியாகும். எனினும் பசுமையான இடமாகும். இதில் ஏராளமான பள்ளத்தாக்குகளும், மலைகளும் உள்ளன. அது தெற்கில் யமன் நாட்டுடனும், வடக்கில் சிரியா பாலைவனம் மற்றும் ஈராக் வரையிலும் சென்றடைகின்றது. அதன் மேற்கில் ஹிஜாஸ் பாலைவனம் அமைந்துள்ளது. இந்தப் பகுதி கடல் மட்டத்திலிருந்து 1200 மீட்டர் உயரமாகும். இந்த உயரத்தின் அடிப்படையில் அதனை நஜ்த் என்று கூறுகின்றார்கள்.

(சீரத் ஃபர்ஹின்ங் பக்கம் 297 – 2003 ஆம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

நஜதில் பனூ கிலாப் கோத்திரம் முஸ்லிம்களுக்கு எதிராக ஒன்று திரண்டிருந்தது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மக்களை கட்டுப்படுத்துவதற்காக அங்கு அனுப்பினார்கள். இந்தப் போர் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டில் ஷஃபான் மாதத்தில் நடந்தது. ஹஸ்ரத் சலமா பின் அக்வா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். மேலும் அன்னாரை எங்களுக்கு அமீராக ஆக்கி இருந்தார்கள்.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 6 பக்கம் 113 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூசுஃப்யான் ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பிறகு மக்காவிற்கு வந்தார். அது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹுதைபியா உடன்படிக்கையை மீறியவாறு குரைஷிகளின் நண்பர்களான பனூ பக்ர் முஸ்லிம்களின் நட்புக் கோத்திரமான பனூ ஹுஸாவின் மீது தாக்குதல் தொடுத்தது. குரைஷிகள் ஆயுதங்கள் மற்றும் சவாரிகளைக் கொடுத்து பனூ பக்ருக்கு உதவி செய்தார்கள். ஹுதைபியா உடன்படிக்கைகளை பேணவில்லை. நாங்கள் எந்த உடன்படிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று மிக ஆணவத்துடனும், அகந்தையுடனும் கூறி விட்டனர். அப்போது அபூசுஃப்யான் மதீனாவிற்கு வந்தார். ஹுதைபியா உடன்படிக்கையை புதுப்பித்துக் கொள்ள விரும்பினார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார். ஆனால் அன்னார் (ஸல்) அவர்கள் அவரிடம் எதுவும் பேசவில்லை. பின்னர் அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பேசுமாறு அன்னாரிடம் கூறினார். ஆனால் நான் அவ்வாறு செய்ய மாட்டேன் என்று அன்னார் (ரலி) கூறி விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பில் ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று அபூசுஃப்யான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சென்றார். அன்னார் (ரலி) அவர்களும் நிராகரித்து விட்டார்கள். எல்லா நிலையிலும் அவர் தோல்வியுற்று திரும்பினார்.

(சீரத் இப்னே ஹிஷாம் பக்கம் 734, 735 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மக்கா வெற்றிப் போர்: இந்தப் போரை அல்ஃபத்ஹில் அஃலம் போர் என்றும் கூறுவார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ தொகுதி 3 பக்கம் 386 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில்

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

அச்சிடப்பட்டது

இந்தப் போர் அதாவது மக்கா போர் ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு ரமலானில் நடந்தது. தபரி வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை பயணத்திற்கு புறப்படும்படி கட்டளையிட்டார்கள். அப்போது எனது பயணப் பொருட்களை ஆயத்தம் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது குடும்பத்தினரிடம் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது மகள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய வீட்டிற்கு சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பயண பொருட்களுக்கான தயாரிப்புகளை செய்து கொண்டிருந்தார்கள். எனது மகளே! இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது பயணப் பொருட்களை தயார் செய்யும்படி உமக்கு கட்டளை ஏதும் வழங்கியுள்ளார்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஆம்! என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்கு செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளார்கள் என்று நீ நினைக்கின்றாய் என ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள் அதற்கு எனக்கு எதுவும் தெரியாது என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை நோக்கி செல்வதாக மக்களிடம் கூறினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் உடனடியாக ஏற்பாடு செய்து தயாராகும்படியும் கட்டளை வழங்கினார்கள். மேலும் இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! குரைஷியர்களின் ஒற்றர்களையும், உளவாளிகளையும் தடுத்து நிறுத்துவாயாக. எந்த அளவுக்கென்றால் நாங்கள் அந்த மக்களின் பகுதிகளில் திடீரென சென்றடைந்து விட வேண்டும். எனவே மக்கள் அந்த வழிகாட்டலுக்கேற்ப தயாரிப்புகளை செய்யத் தொடங்கி விட்டார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 3 பக்கம் 166 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவத்தை மேலும் விவரித்தவாறு சீரத் ஹலபியா எனும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தபோது அந்த நேரத்திலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு வருகை தந்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் (ஸல்) பயணம் மேற்கொள்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்களா? என்று அன்னார் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு ஆம்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்படியென்றால் நானும் தயாராகி விடவா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். சரி என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எங்கு செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்கள்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு குரைஷியர்களை எதிர்கொள்வதற்கு என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனினும் இந்த விஷயத்தை இரகசியமாக வைக்கும்படியும் அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

சுருக்கமாக அன்னார் (ஸல்) அவர்கள் மக்களுக்கு ஆயத்தமாகும்படி கட்டளை வழங்கினார்கள். ஆயினும் அன்னார் (ஸல்) அவர்கள் எங்கு செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளார்கள்? என்ற செய்தியை அவர்களிடமிருந்து அன்னார் (ஸல்) மறைத்து வைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! குரைஷியர்கள் மற்றும் நமக்கிடையில் இதுவரை உடன்படிக்கை மற்றும் சமாதானத்திற்கான காலஅளவு எஞ்சியிருக்கவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு ஆம்! (எஞ்சியுள்ளது) எனினும் அவர்கள் நம்பிக்கை துரோகம் செய்து விட்டனர். உடன்படிக்கையை முறித்து விட்டனர். எனவே நான் உங்களிடம் கூறியவற்றை இரகசியமாகவே வையுங்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஓரிடத்திற்கு புறப்படுவதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு ஆம்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். தாங்கள் பனூ அஸ்ஃபர் கோத்திரத்தை அதாவது ரோமானியர்களின் பக்கம் செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு இல்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால் நஜத் பகுதியை நோக்கி செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு இல்லை என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால் ஒருவேளை குரைஷிகளிடம் செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கும் ஆம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஆனால் உங்களுக்கும், அவர்களுக்கும் இடையில் இன்னும் உடன்படிக்கைக்கான காலக்கெடு எஞ்சியுள்ளதே? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் பனூ கஅப் கோத்திரத்துடன் அதாவது பனூ ஹுஸா கோத்திரத்துடன் எவ்வாறு நடந்து கொண்டனர் என்று உங்களுக்குத் தெரியாதா? அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிராமப்புறம் மற்றும் சுற்று வட்டாரத்திலிருந்த முஸ்லிம்களுக்கு தூதுச் செய்தியை அனுப்பினார்கள். எந்த நபர் அல்லாஹ்வின் மீதும், மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளாரோ அவர் ரமலான் மாதத்தில் மதீனா வந்தடைந்து விடட்டும் என்று அவர்களுக்கு கட்டளை வழங்கினார்கள்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறிவிப்பிற்கேற்ப அரபு கோத்திரங்கள் மதீனாவிற்கு வரத் தொடங்கி விட்டன. மதீனாவை வந்தடைந்த கோத்திரங்களில் பனூ அஸ்லம், பனூ கிஃபார், பனூ முஸைனா, பனூ அஷ்ஜஆ, பனூ ஜுஹைனா ஆகிய

கோத்திரங்கள் அடங்கும். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இந்த துஆவை செய்தார்கள்: அல்லாஹ்வே! குரைஷிகளின் ஒற்றர்களையும், உளவாளிகளையும் தடுத்து நிறுத்துவாயாக. எந்த அளவுக்கென்றால் நாங்கள் அவர்களின் பகுதிகளில் அந்த மக்களிடம் திடீரென சென்றடைந்து விட வேண்டும். வந்து செல்லக் கூடிய ஒவ்வொருவரையும் அறிந்து கொள்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா வழிப்பாதைகளிலும் கண்காணிக்கும் குழுக்களை அமர்த்தினார்கள். வெளியிலிருந்து வரக் கூடிய அறியாத நபர் ஒருவர் உங்களை கடந்து சென்றால் முஸ்லிம்களின் தயாரிப்புகளை குறித்து குரைஷிகள் அறிந்து விடாமல் இருக்கும் வகையில் அவர்களை தடுத்து நிறுத்தி விடுங்கள் என்று அந்த மக்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள்.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 3 பக்கம் 107, 108 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவத்தை விளக்கமாக எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஒரு துணைவியாரிடம் எனது பயணப் பொருட்களை எடுத்து வைக்கத் தொடங்கி விடுங்கள் என்று கூறினார்கள். எனவே அன்னாரும் பயணப் பொருட்களை எடுத்து வைக்க தொடங்கி விட்டார்கள். தமக்காக சத்தூ என்ற உணவுப் பொருட்களையும் அல்லது கடலை போன்றவற்றையும் நனைத்து ஆயத்தப்படுத்தவும் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். இதுபோன்ற உணவுகளே அந்த நாட்களில் கிடைத்து வந்தன. எனவே அன்னார் மண் போன்றவற்றை உலர்த்தி தானியங்களை பிரித்தெடுக்க தொடங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது மகளின் வீட்டிற்கு வந்தார்கள். அன்னார் இந்த ஏற்பாட்டை கண்டார்கள். என்ன நடக்கின்றது? என்று அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஏதும் பயணத்திற்கு செல்கின்றார்களா? பயண ஏற்பாடு தென்படுகின்றதே? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள்.

அன்னார் (ஸல்) அவர்கள் பயணத்திற்கு தயாரிப்பு செய்யும்படி கூறியிருந்தார்கள்.

ஏதேனும் போருக்கு செல்லும் திட்டமா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று அன்னார் கூறினார்கள். எனது பயணத்திற்கான பொருட்களை தயார் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம் என்று கூறினார்கள்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும் ஹுஸா கோத்திரத்தைச் சார்ந்த நபர்கள் இந்த நிலையில் என்னிடம் வந்தது பற்றி உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். மேலும் சம்பவம் இதுவாகும்: அவர்கள் நம்பிக்கை துரோகம் செய்து விட்டனர் இறைவன் எனக்கு அந்த சம்பவத்தை குறித்து முன்னரே செய்தி வழங்கி விட்டான். நாம் அவர்களுடன் உடன்படிக்கை செய்திருக்கின்றோம். இனி நாம் அச்சப்படுவது நமது ஈமானுக்கு எதிரானதாகும். மக்காவாசிகளின் வீரம் மற்றும் ஆற்றலைக் கண்டு அவர்களை எதிர்ப்பதற்கு தயாராகாமல் இருப்பது ஈமானிற்கு எதிரானதாகும். எனவே நாம் அங்கு செல்ல வேண்டும். உங்களின் கருத்து என்ன? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் அவர்களுடன் உடன்படிக்கை செய்துள்ளீர்கள். அதுமட்டுமல்ல அவர்கள் உங்களது சொந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். தாங்கள் உங்களது சமுதாயத்தையே கொன்று விடுவீர்களா? என்பது அதன் பொருளாக இருந்தது. நாம் எமது சமுதாயத்தை அழிக்க மாட்டோம். (மாறாக) உடன்படிக்கையை முறித்தவர்களை அழிப்போம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அன்னார் (ரலி) இவ்வாறு கூறினார்கள்: பிஸ்மில்லாஹ். இந்த நாட்கள் (எங்களுக்கு) கிடைக்க வேண்டும். மேலும் நாங்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பாதுகாப்பிற்காக போரிட வேண்டும் என்று நான் தினமும் துஆக்கள் செய்து கொண்டிருந்தேன்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் மென்மையான இயல்பு படைத்தவர். எனினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவிலிருந்து உண்மையான கூற்று மிக அதிகம் வெளிப்படுகின்றது. எனவே தயாராகுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்னர் சுற்றுவட்டாரத்திலுள்ள கோத்திரங்களுக்கு இந்த அறிவிப்பை அனுப்பி வைத்தார்கள். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது நம்பிக்கை கொண்டுள்ள ஒவ்வொரு நபரும் ரமலான் மாதத்தின் தொடக்க நாட்களில் மதீனாவில் ஒன்று கூட வேண்டும். எனவே படை ஒன்றுதிரள ஆரம்பித்தது. பல ஆயிரம் நபர்களின் படை தயாராகி விட்டது. அன்னார் (ஸல்) அவர்கள் போருக்காக சென்று விட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் புறப்பட்டபோது அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவனே! நான் உன்னிடம் துஆ செய்கின்றேன். நீ மக்காவாசிகளின் காதுகளை செவிடாக்கி விடுவாயாக. அவர்களின் உளவாளிகளை குருடர்களாக்கி விடுவாயாக. அவர்கள் எங்களை பார்க்கவும் கூடாது. எங்களைப் பற்றி எந்தவொரு விஷயமும் அவர்களின் காதுகளுக்கு சென்றடையவும் கூடாது. எனவே அன்னார் (ஸல்) அவர்கள் புறப்பட்டார்கள். மதீனாவில் நூற்றுக்கணக்கான நயவஞ்சகர்கள் இருந்தார்கள். ஆயினும் பத்தாயிரம் நபர்களைக் கொண்ட படை மதீனாவிலிருந்து புறப்பட்டது. எந்தவொரு தகவலும் மக்காவை சென்றடையவில்லை.

(ஸேரே ரூஹானீ (7), அன்வாருல் உலூம் தொகுதி 24 பக்கம் 260–262)

இது அல்லாஹ்வின் பணியாக இருந்தது.

இப்னு சஅதின் தக்பாத் எனும் நூலில் இவ்வாறு எழுதுப்பட்டுள்ளது: முஸ்லிம்களின் பயணக் குழு இஷா நேரத்தில் மர்ருல் லஹ்ரான் எனும் இடத்தை சென்றடைந்தது. மர்ருல் லஹ்ரான் மக்காவிலிருந்து மதீனா செல்லும் வழியில் 25 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. அதாவது 25 கி.மீ தொலைவில் மக்கா இருந்தது. அன்னார் (ஸல்) அவர்கள் தமது சஹாபிகளுக்கு கட்டளை வழங்கினார்கள். எனவே அவர்கள் பத்தாயிரம் இடத்தில் நெருப்பின் ஒளியை மூட்டினார்கள். குரைஷியர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையைப் பற்றிய செய்தி சென்றடையவில்லை. அவர்கள் வேதனையுற்றிருந்தார்கள். ஏனென்றால் அன்னார் (ஸல்) அவர்கள் அவர்களுடன் போர் புரிவார்கள் என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. அது அவர்களின் எண்ணமாக இருந்தது. செய்தி சென்றடைந்திருக்கவில்லை. ஆயினும் இனி போர் கண்டிப்பாக நிகழும் என்ற எண்ணம் குரைஷியர்களுக்கு இருந்தது. இந்த விஷயத்தின் மீது துன்பமும் இருந்தது.

எவ்வாறிருப்பினும் புறப்பட்ட தகவல் அவர்களுக்கு கிடைத்து விட்டது என்று இங்கு தவறாக எழுதப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. இங்கு வந்தடைந்த பிறகு தான் அவர்களுக்கு செய்தி கிடைத்தது. எனவே இந்த பயணக் குழு அங்கு தங்கி விட்டது. மேலும் பத்தாயிரம் இடங்களில் நெருப்பின் வெளிச்சம் மூட்டப்பட்டது. எனவே குரைஷிகள் அபூசுஃப்யானை நிலைமையை அறிந்து வரும்படி அனுப்பினார்கள். நீர் முஹம்மது (ஸல்) அவர்களை சந்தித்தால் எங்களுக்காகவும் அவர்களிடம் பாதுகாப்பு பெற்றுக் கொள்ளும் என்றும் அவர்கள் கூறினர். அபூசுஃப்யான் பின் ஹரப், ஹகீம் பின் ஹிஸாம், புதைல் பின் வர்கா ஆகியோர் புறப்பட்டார்கள். அவர்கள் படையை கண்டதும் மிகவும் பதற்றமடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இரவில் பாதுகாப்பு பணியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை கண்காணிப்பாளராக நியமித்திருந்தார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூசுஃப்யானின் குரலைக் கேட்டதும் அபூஹன்லலா என்று விழித்தார்கள். அபூஹன்லலா என்பது அபூசுஃப்யானின் சுட்டுப் பெயராகும். அவர் லெப்பைக் என்று கூறினார். உமக்கு பின்னால் என்ன உள்ளது? என்று கேட்டார். அதாவது அபூசுஃப்யான் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம் உமக்கு பின்னால் என்ன உள்ளது? என்று கேட்டார். பத்தாயிரம் நபர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளார்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அவருக்கு அடைக்கலம் வழங்கி விட்டார்கள். அவரையும், அவரது இரண்டு தோழரையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அன்னார் ஆஜர்படுத்தினார்கள். மூன்று நபர்களும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 102, 103 – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னும் இதன் தொடர் செல்கின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

# ஜும்ஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் மு‘ஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 பிப்ரவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு தப்லீக் மாதம் **11 ஆம் தேதி** ஆற்றிய **ஜும்ஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

வரலாற்றில் மக்கா வெற்றி தொடர்பாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஒரு கனவைக் குறித்த குறிப்பு கிடைக்கின்றது. அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தமது கனவை எடுத்துரைத்தவாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு ஒரு கனவு காட்டப்பட்டது. நான் அந்த கனவில் தங்களைக் கண்டேன். நாம் மக்காவிற்கு அருகில் சென்று விட்டோம். ஒரு பெண் நாய் குரைத்தவாறு நம்மை நோக்கி வந்தது. பின்னர் நாம் அதற்கு அருகில் சென்றபோது அது புறமுதுகு காட்டி விட்டது. அதனிடமிருந்து பால் வெளிப்பட்டது என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்களின் தீங்கு அகன்று விட்டது. நன்மை நெருங்கி விட்டது. அவர்கள் உமது உறவு முறையை முன் வைத்து உமது அடைக்கலத்தில் வருவார்கள். நீங்கள் அவர்களில் சிலரை சந்திக்க உள்ளீர்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கனவிற்கு இந்த விளக்கத்தை வழங்கினார்கள். எனவே நீங்கள் அபூசுஃப்யானைக் கண்டால் அவரை கொல்ல வேண்டாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே அபூசுஃபான் மற்றும் ஹகீம் பின் ஹிஸாம் ஆகியோரை மர்ருல் லஹ்ரான் என்ற இடத்தில் முஸ்லிம்கள் கண்டார்கள்.

(தலாயினுன் நுபுவ்வத் தொகுதி 5 பக்கம் 48 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்னு உக்பா அறிவிக்கின்றார்கள்: அபூசுஃப்யான் மற்றும் ஹகீம் பின் ஹிஸாம் திருப்பிச் சென்றபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு அபூசுஃப்யானின் இஸ்லாத்தை குறித்து அச்சம் உள்ளது என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அபூசுஃப்யான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதை எவ்வாறு ஒப்புக் கொண்டார் என்ற குறிப்பு ஏற்கனவே விரிவாக எடுத்துரைக்கப்பட்டு விட்டது. இஸ்லாத்தின் மேன்மையை அவர் ஒப்புக் கொண்டிருந்தார். எவ்வாறிருப்பினும் அவரை அழைத்து திரும்ப கொண்டு வாருங்கள். எந்த அளவுக்கென்றால் அவர் இஸ்லாத்தை புரிந்து கொள்ளட்டும். மேலும் அவர் தங்களுடன் அல்லாஹ்வின் படைகளையும் கண்டு கொள்ளட்டும் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இப்னு அபீ ஷேபா அறிவிக்கின்றார்கள்: அபூசுஃப்யான் திரும்பிச் செல்ல தொடங்கியபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அபூசுஃப்யானைக் குறித்து தாங்கள் கட்டளையிட்டால் நாங்கள் அவரது வழிப்பாதையை தடுத்து நிறுத்தி விடுவோம் என்று கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இப்னு இஸ்ஹாக் அறிவிக்கின்றார்கள்: அபூசுஃப்யான் திரும்பி சென்று கொண்டிருந்தபோது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், அவரை அதாவது அபூசுஃப்யானை பள்ளத்தாக்கில் தடுத்து நிறுத்தி விடுங்கள் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூசுஃப்யானை சென்றடைந்தார்கள். மேலும் தடுத்து நிறுத்தினார்கள். அப்போது பனூ ஹாஷிமே! நீர் ஏமாற்றுகின்றீரா? என்று அபூசுஃப்யான் கூறினார். நபித்துவ கூட்டத்தினர் ஏமாற்றுவதில்லை என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பிற்கேற்ப நாங்கள் ஒருபோதும் ஏமாற்றுபவர்கள் அல்ல. எனினும் நீர் காலை வரை காத்திருக்கவும். எந்த அளவுக்கென்றால் நீர் அல்லாஹ்வின் படையை கண்டு கொள்ளும். மேலும் அல்லாஹ் இணை வைப்பவர்களுக்காக தயார் செய்துள்ளதை நீர் கண்டு கொள்ளும் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூசுஃப்யானை அந்த பள்ளத்தாக்கில் தடுத்து நிறுத்தினார்கள். எந்த அளவுக்கென்றால் பொழுது விடிந்து விட்டது.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 218 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இஸ்லாமிய படை அபூசுஃப்யானுக்கு முன்னால் கடந்து சென்று கொண்டிருந்தபோது அதனைக் குறிப்பிட்டவாறு سُبُلُ الْهُدٰى وَالرَّشَاد என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது அபூசுஃப்யானிற்கு முன்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பச்சை நிற ஆடை அணிந்த படை தோன்றியது. அதில் முஹாஜிர்களும், அன்ஸார் சகோதரர்களும் இருந்தனர். அந்தப் படையில் கொடிகள் இருந்தன. அன்ஸார் கூட்டத்தினரின் ஒவ்வொரு கோத்திரத்தினரிடமும் ஒரு கொடி இருந்தது. அது இரும்புக் கம்பியில் கட்டப்பட்டிருந்தது. அதாவது அவர்கள் இரும்பு கவசங்கள் அதாவது போர் கவசங்களை அணிந்திருந்தார்கள். அவர்களின் கண்கள் மட்டுமே தென்பட்டன. அவர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உரத்த குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. உங்களின் முந்தைய பகுதி இறுதிப் பகுதியுடன் இணைந்து விடும் வகையில் மெதுவாக செல்லுங்கள் என்று அன்னார் கூறிக் கொண்டிருந்தார்கள். அந்தப் படையில் ஓராயிரம் இரும்புக் கவசங்கள் அணிந்திருந்த நபர்கள் இருந்தனர் என்று கூறப்படுகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கொடியை ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்களுக்கு வழங்கி இருந்தார்கள். மேலும் அன்னார் படைக்கு முன்னால் இருந்தார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அபூசுஃப்யானை வந்தடைந்தபோது அன்னார் இன்றைய நாள் இரத்தம் சிந்தப்படும் நாளாகும். இன்றைய நாளில் தடை செய்யப்பட்ட விஷயங்கள் ஹலாலாக்கப்பட்டு விடும். இன்றைய நாள் குரைஷிகள் இழிவடைவார்கள். என்று அபூசுஃப்யானை நோக்கி கூறினார்கள். அப்போது அபூசுஃப்யான் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், அப்பாஸே! இன்று எனது பாதுகாப்பின் பொறுப்பு உம் மீது உள்ளது. அதன் பிறகு ஏனைய கோத்திரங்கள் அங்கு கடந்து சென்றன. அதற்குப் பிறகு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அங்கு அமர்ந்திருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் கஸ்வா என்ற தமது பெண் ஒட்டகத்தின் மீது சவாரி செய்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸைத் பின் ஹுழைர் (ரலி) ஆகியோருக்கு மத்தியில் அவர்கள் இருவரிடமும் பேசியவாறு வந்து கொண்டிருந்தார்கள். அப்போது இவர்கள் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூசுஃப்யானிடம் கூறினார்கள்.

(சுபுலுல் ஹுதா தொகுதி 5 பக்கம் 220, 221 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தில் மக்காவிற்குள் நுழைந்தபோது அன்னார் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தை கண்டார்கள். அதாவது பெண்கள் குதிரைகளின் முகங்களில் இரண்டு துணிகளை கட்டியவாறு அவற்றை பின்னால் அகற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்முறுவல் செய்தவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை பார்த்தார்கள். மேலும் அபூபக்ரே! ஹிஸ்ஸாம் பின் சாபித் எவ்வளவு சிறப்பாக கூறியுள்ளார் எனறு கூறினார்கள். அப்போது

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கீழ்க்கண்ட கவிதை வரிகளை படித்தார்கள்.

عَدِمۡتُ بُنَيَّتِيۡ اِنۡ لَمۡ تَرَوۡهَا
تُثِيۡرُ النَّقۡعَ موعدها كَدَاءُ
يُنَازِعۡن الۡاَعِنَّةَ مُسۡرِحَاتٍ
يُلَطِّمُهُنَّ بِالۡخُمُرِ النِّسَاءُ

அதாவது நீங்கள் இதுபோன்ற படைகள் தூசியை கிளப்புவதை பார்க்காவிட்டால் நான் எனது அன்பிற்குரிய மகளை இழந்து விடுவேன். அந்த வேகமாக ஓடக் கூடிய குதிரைகள் தமது கடிவாளங்களை இழுத்துக் கொண்டிருக்கின்றன. பெண்கள் அதனை தமது துப்பட்டாக்களால் அடித்துக் கொண்டிருக்கின்றனர். அப்போது இந்த நகரத்தில் எங்கிருந்து நுழைவதாக ஹஸ்ஸாம் அவர்கள் கூறியிருந்தார்களோ அதாவது கபா என்ற இடத்திலிருந்து இந்த நகரத்திற்குள் நுழையுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 227 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அரஃபாத்தின் இரண்டாவது பெயர் கபா ஆகும். மக்காவின் வெளிப்புறத்திலிருந்து உள்ளே நுழையக் கூடிய ஒரு மலைப்புற பாதையாகும். மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இங்கிருந்தே மக்காவிற்குள் நுழைந்திருந்தார்கள்.

(சீரத் ஃபர்ஹின்ங் பக்கம் 242 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள கராச்சியில் அச்சிடப்பட்டது

மக்கா வெற்றியின் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாதுகாப்பிற்கான அறிவிப்பைச் செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்களே! அபூசுஃப்யான் கண்ணியத்தை விரும்புகின்றார். அப்போது எவர் அபூசுஃப்யானின் வீட்டிற்குள் நுழைந்து விடுவாரோ அவரும் பாதுகாப்பு பெறுவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஷரஹ் ஸர்கானீ அலல் மவாஹிப் லித்துன்யா தொகுதி 3 பக்கம் 421 – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மக்கா வெற்றி கொள்ளப்பட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுபுல் சிலையைக் குறித்து கட்டளை வழங்கியிருந்தார்கள். எனவே அவை வீழ்த்தப்பட்டது. அன்னார் (ஸல்) அவர்கள் அதற்கு அருகில் நின்று கொண்டார்கள். அப்போது ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) அவர்கள் அபூசுஃப்யானிடம், அபூசுஃப்யானே! ஹுபுல் சிலை வீழ்த்தப்பட்டு விட்டது. உள்ளபடியே உஹது போர் நாளன்று நீர் அது குறித்து மிகவும் ஆணவத்துடன் இருந்தீர் என்று கூறினார்கள். அது உங்கள் மீது அருள் செய்துள்ளதாக நீர் அறிவிப்பு செய்திருந்தீர். அப்போது அபூசுஃப்யான் கூறினார். அவ்வாமின் மகனே! அந்த விஷயங்களை இப்போது விட்டு விடும். முஹம்மது (ஸல்) அவர்களின் இறைவனைத் தவிர வேறொரு இறைவன் இருந்திருந்தால் இன்று நடந்த விஷயம் நடந்திருக்காது என்பதை நான் அறிந்து கொண்டேன் என்று கூறினார். இதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஃபத்துல்லாஹ்வின் ஒரு மூலையில் அமர்ந்து விட்டார்கள். மேலும் மக்கள் அன்னார் (ஸல்) அவர்களை சுற்றி ஒன்றுகூடி விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாளன்று அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வாளை ஏந்திக் கொண்டு அன்னார் (ஸல்) அவர்களின் பாதுகாப்பிற்காக அன்னார் (ஸல்) அவர்களின் தலை மேல் அதாவது அன்னார் (ஸல்) அவர்களின் தலைக்கு அருகே நின்று கொண்டிருந்தார்கள்.

(சபலுல் ஹுதா தொகுதி 5 பக்கம் 225 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹுனைன் போரைக் குறித்து இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. ஹுனைன் போர் அதாவது அதன் மற்றொரு பெயர் ஹவாஸின் போர் ஆகும். மேலும் ஹவ்தாஸ் போர் என்றும் கூறுவார்கள். புனித மக்கா மற்றும் தாயிஃப் நகரத்திற்கு மத்தியில் மக்காவிலிருந்து 30 மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு பள்ளத்தாக்கு ஹுனைன் ஆகும். ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டில் ஷவ்வால் மாதத்தில் மக்கா வெற்றிக்குப் பிறகு ஹுனைன் போர் நடந்தது. அல்லாஹ் தனது தூதர் (ஸல்) அவர்களின் கைகளில் மக்காவை வெற்றி கொள்ளச் செய்து விட்டான். அப்போது ஹவாஸின் மற்றும் சகீஃப் ஊரின் தலைவர்கள் ஒருவர் மற்றவரை சந்தித்தனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுடனும் போர் புரிவார்கள் என்று அந்த மக்கள் அஞ்சிக் கொண்டிருந்தனர்.

(அஸீரத்துன் ஹலபிய்யா தொகுதி 3 கஸ்வா ஹுனைன் பக்கம் 151 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மாலிக் பின் அவ்ஃப் நஸ்ரி அரபு கோத்திரங்களை ஒன்றுகூட்டினார். எனவே அவரிடம் ஹவாஸினுடன் பனூ சகீஃப் மற்றும் பனூ நஸர், பனூ ஹுஷம், சஅத் பின் பக்ர், பனூ ஹிலால் ஆகிய கோத்திரங்களின் மக்கள் ஒன்று கூடினர்.

(சீரத் இப்னு ஹஷ்ஷாம் பக்கம் 761 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த மக்கள் அவ்தாஸ் என்ற இடத்தில் ஒன்று கூடினர். அவ்தாஸ் என்பது ஹுனைனிற்கு அருகிலுள்ள ஒரு பள்ளத்தாக்கு அகும். மாலிக் பின் அவ்ஃப் தனது உளவாளியை அனுப்பி வைத்தார். அந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி செய்தி அறிந்து வர அவர்களை அனுப்பி வைத்தார். அந்த மக்கள் ஒன்றுகூடிய செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செவியுற்றபோது அன்னார் (ஸல்) அவர்கள் தமது சஹாபிகளில் ஒருவரான அப்துல்லாஹ் பின் அபீ ஹத்ரத் அஸ்லமி என்பவரை அவர்களின் செய்திகளை கொண்டு வருவதற்காக அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹவாஸினை எதிர்ப்பதற்காக புறப்படுவதற்கு முடிவெடுத்தார்கள். போருக்காக சஃப்வான் பின் உமைய்யா மற்றும் தனது சிறிய தந்தை வழி சகோதரரான நஃபல் பின் ஹாரிஸ் ஆகியோரிடமிருந்து ஆயுதங்களை வாங்கினார்கள். இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 12 ஆயிரம் நபர்களைக் கொண்ட படைகளுடன் பனூ ஹவாஸினுடன் போரிடுவதற்காக புறப்பட்டார்கள். அதிகாலையில் ஹுனைன் என்ற இடத்தை சென்றடைந்தார்கள். மேலும் பள்ளத்தாக்கிற்குள் நுழைந்து விட்டார்கள். இணை வைப்பவர்களின் படை அந்தப் பள்ளத்தாக்கில் ஏற்கனவே ஒளிந்திருந்தது. அவர்கள் திடீரென முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். எந்த அளவிற்கு கடுமையாக அம்புகளை எய்தார்கள் என்றால் முஸ்லிம்கள் திரும்பி ஓடி விட்டார்கள். மேலும் சிதறுண்டு விட்டார்கள். அதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் சில சஹாபிகள் மட்டுமே எஞ்சியிருந்தனர். அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள்.

(அஸீரத்துன் ஹலபிய்யா தொகுதி 3 பக்கம் 151–154 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூ இஸ்ஹாக் அறிவிக்கின்றார்கள்: ஒரு நபர் பராவிடம் வந்தார். மேலும் நீங்கள் ஹுனைன் நாளன்று புறமுதுகு காட்டி விட்டீர்கள் என்று கூறினார். அதற்கு அவர் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து சாட்சி வழங்குகின்றேன். அன்னார் (ஸல்) அவர்கள் புறமுதுகு காட்டவில்லை. எனினும் விரைவாகவும், ஆயுதங்கள் இன்றியும் மக்கள் ஹவாஸின் கோத்திரத்தை நோக்கி சென்றார்கள். அவர்களோ அம்பு எய்வதில் சிறப்புமிக்க சமுதாயமாக இருந்தார்கள். அவர்கள் எப்படிப்பட்ட அம்பின் மழையை பொழிந்தார்கள் என்றால் அது விட்டில் பூச்சி கூட்டமாக இருந்தது. அதன் விளைவாக அவர்கள் (முஸ்லிம்கள்) தங்களது இடங்களை விட்டு விலகி விட்டார்கள்.

(சஹிஹ் முஸ்லிம், கிதாபுல் ஹிஜாத், பாப் ஃபீ கஸ்வா ஹுனைன் ஹதீஸ் எண் 4616)

அதுபோன்ற நிலைகளில் முஹாஜிர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உறுதிப்பாட்டுடன் நிலைநின்றார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அஹ்லே பைத்தைச் சார்ந்தவர்களில் ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தைவழி சகோதரர் அபூசுஃப்யான் பின் ஹாரிஸ் மற்றும் அவரது மகன் ஹஸ்ரத் ஃபஸல் பின் அப்பாஸ், ரபீஆ பின் ஹாரிஸ், உஸாமா பின் ஸைத் ஆகியோரைக் குறித்து அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்ததாக குறிப்பு கிடைக்கின்றது.

(அஸீரத்துன் ஹலபியா லி இப்னீ ஹிஷாம் பக்கம் 764 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூகதாதா (ரலி) அறிவிக்கின்றார்கள். ஹுனைன் போருக்கான நேரமாக இருந்தது. அப்போது முஸ்லிம்களில் ஒரு நபரை நான் கண்டேன். அவர் ஓர் இணை வைப்பவருடன் போரிட்டுக் கொண்டிருந்தார். மற்றோர் இணை வைப்பவரும் இருந்தான். அவன் தந்திரம் செய்து மறைந்திருந்து அவருக்குப் பின்னால் இருந்து அவரை தாக்க விரும்பினான். அவரை கொலை செய்து விட அவன் விரும்பினான். எனவே நான் அவனை நோக்கி சென்றேன். அதாவது ஏமாற்றத்தின் மூலம் ஒரு முஸ்லிமை கொலை செய்ய விரும்பிய அந்த நபரிடம் சென்றேன். அவன் என்னை கொல்வதற்காக கையை உயர்த்தினான். நான் அவனது கையில் தாக்குதல் தொடுத்தேன். அவனது கை உடைந்து விட்டது. பின்னர் நான் அவனை பிடித்து விட்டேன். அவன் என்னை மிக வேகத்துடன் அழுத்தினான். எந்த அளவுக்கென்றால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பின்னர் அவன் என்னை விட்டு விட்டான். நான் அவனை ஏமாற்றினேன். பின்னர் நான் அவனை கொன்று விட்டேன். மற்றொரு பக்கம் முஸ்லிம்கள் தோல்வியுற்று ஓடி விட்டனர். நானும் அவர்களுடன் ஓடி விட்டேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பின்னர் மக்கள் திரும்பி வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒன்று சேர ஆரம்பித்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எந்த நபர் ஒரு கொலையுண்டவரைப் பற்றி அவர் இன்ன நபரை கொலை செய்தார் என்பதற்கு ஆதாரங்களை சமர்ப்பிப்பாரோ அந்த நிலையில் கொலையுண்டவரின் பொருட்கள் அவரை கொலை செய்தவருக்கு உரியதாகி விடும். எனவே நான் எழுந்தேன். நான் கொலை செய்தவர்களைக் குறித்து ஏதாவது சாட்சியம் கிடைக்குமா என்று பார்த்தேன். ஆனால் யாரும் கிடைக்கவில்லை. எனது உள்ளம் சாட்சி வழங்கட்டும் என்று எண்ணி நான் அமர்ந்து விட்டேன்.

பின்னர் எனக்கு நினைவு வந்தது. நான் அந்த கொலையாளி கொலையுண்ட சம்பவத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினேன். அன்னார் (ஸல்) அவர்கள் உடன் அமர்ந்திருந்தவாறு ஒரு நபரிடம் கூறினார்கள். இவர் எந்த கொலையாளியின் ஆயுதங்களைக் குறித்து குறிப்பிடுகின்றாரோ அவை என்னிடம் உள்ளன. எந்த நபரிடம் ஆயுதங்கள் இருந்தனவோ அவர் கூறினார்: இந்த ஆயுதங்களுக்குப் பகரமாக தாங்கள் (ஸல்) அவர்கள் அவருக்கு வேறு ஏதாவது கொடுத்து அவரை திருப்திப்படுத்துங்கள். அதாவது என்னிடம் எந்தப் பொருட்கள் உள்ளனவோ அதனை என்னிடமே விட்டு விடுங்கள். அவருக்கு வேறொன்றை கொடுங்கள் என்று கூறினார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அங்கு அமர்ந்திருந்தார்கள். அவ்வாறு ஒருபோதும் நடக்காது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷிகளின் ஒரு கோழைக்கு பொருட்களை கொடுத்து விடுவார்கள். மேலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) சார்பாக போரிடுகின்ற சிங்கத்தை விட்டு விடுவார்கள் என்று கூறுவதா?

ஹஸ்ரத் அபூகதாதா இவ்வாறு கூறி வந்தார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் அந்த பொருட்களை எனக்கு கொடுத்து விட்டார்கள். நான் அதிலிருந்து பேரீத்தம் பழங்கள் கொண்ட ஒரு தோட்டத்தை விலைக்கு வாங்கினேன். இஸ்லாத்தில் எனது சொத்தாக ஆக்கிக் கொண்ட முதலாவது செல்வம் அதுவாக இருந்தது.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 4322)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள். ஹுனைன் போர் சந்தர்ப்பத்தில் மக்கத்து காஃபிர்கள், இன்று நாங்கள் எங்களது வீர, தீரத்தை காட்டுவோம் என்று கூறியவாறு இஸ்லாமிய படையில் இணைந்து விட்டார்கள். பிறகு பனூ சகீஃப் கோத்திரத்தின் தாக்குதலை தாக்குப் பிடிக்க முடியாமல் போர் மைதானத்திலிருந்து ஓடி விட்டார்கள். அப்போது எப்படிப்பட்ட ஒரு நேரம் வந்தது என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சுற்றிலும் 12 சஹாபிகள் மட்டுமே இருந்தனர். பத்தாயிரம் எண்ணிக்கையில் இருந்த இஸ்லாமிய படையில் பதற்றம் தொற்றிக் கொண்டது. 3000 எண்ணிக்கையிலிருந்த இணை வைப்பவர்களின் படைகள் திறம்பட எய்யக்கூடிய நபர்கள் இருந்தனர். அன்னார் (ஸல்) அவர்களின் வலப் பக்கமும், இடப் பக்கமும் மலைகளில் ஏறி நின்றுக் கொண்டு அன்னார் (ஸல்) மீது அம்பு மழையைப் பொழிந்து கொண்டிருந்தனர். ஆனால் அந்த நேரத்திலும் அன்னார் (ஸல்) அவர்கள் பின்வாங்க விரும்பியிருக்கவில்லை. மாறாக முன்னோக்கி செல்வதையே விரும்பியிருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றமடைந்து அன்னார் (ஸல்) அவர்களின் கால்நடையின் கடிவாளத்தை பிடித்து விட்டார்கள். மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்களே! எனது உயிர் தங்கள் மீது அர்ப்பணம். இது முன்னேறி செல்வதற்குரிய நேரம் அல்ல என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றத்துடன் கூறினார்கள். இன்னும் இஸ்லாமிய படை ஒன்றுசேர்ந்து விடட்டும். அதன் பிறகு நாம் முன்னேறிச் செல்வோம். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் உத்வேகத்துடன் எனது கால்நடையின் கடிவாளத்தை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். பின்னர் கால்நடையை ஓட்டியவாறு முன்னேறி சென்றார்கள். மேலும் أَنَا النَّبِيُّ لَا كَذِبْ أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ என்று கூறியவாறு சென்று கொண்டிருந்தார்கள்.

பொருள்: நான் வாக்களிக்கப்பட்ட நபி ஆவேன். அவரை பாதுகாப்பதற்கு நிரந்தரமான வாக்குறுதி உள்ளது. நான் பொய்யன் அல்லன். எனவே நீங்கள் 3000 திறம் மிக்க அம்பு எய்யும் வீரர்களாக இருங்கள். அல்லது 30000 வீரர்களாக இருங்கள். எனக்கு உங்களைப் பற்றி எந்த கவலையும் இல்லை.

இணை வைப்பவர்களே! எனது இந்த தைரியத்தைக் கண்டு என்னை இறைவனாக கருத்திக் கொள்ளாதீர்கள். நான் ஒரு மனிதன் ஆவேன். உங்களின் தலைவரான அப்துல் முத்தலிப் அவர்களின் மகன் அதாவது பேரன் ஆவேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் குரல் உரத்த குரலாக இருந்தது. அன்னார் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி பார்த்தார்கள். மேலும் அப்பாஸே! முன்னால் வாருங்கள். மேலும் குரல் கொடுங்கள். மிக உரத்த குரலில் அழையுங்கள். பக்ரா அதிகாரத்தின் சஹாபிகளே! அதாவது சூரா பக்ராவை மனனம் செய்த சஹாபிகள் ஆவர். ஹுதைபியா நாளன்று மரத்திற்கு கீழே பைஅத் செய்தவர்களே! இறைவனின் தூதர் உங்களை அழைக்கின்றார்.

ஒரு சஹாபி கூறுகின்றார்: மக்காவின் புதிய முஸ்லிம்களின் கோழைத்தனத்தின் காரணமாக இஸ்லாமிய படையின் கடைசி பகுதி பின்நோக்கி ஓடியபோது எங்களது சவாரிகளும் ஓடத் தொடங்கின. நாங்கள் அவற்றை எவ்வளவு தடுத்தபோதிலும் அதே அளவு வேகத்தில் அவை பின்பக்கமாக ஓடிக் கொண்டிருந்தன. எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் குரல் மைதானத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. சூரா பக்ராவின் சஹாபிகளே! ஹுதைபியா நாளன்று மரத்திற்கு கீழே பைஅத் செய்யக் கூடியவர்களே! இறைவனின் தூதர் உங்களை அழைக்கின்றார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்தக் குரல் எனது காதில் பட்டபோது நான் உயிருடன் இல்லை. மாறாக மரணித்தவனாக இருக்கின்றேன் என்றே எனக்கு தெரிய வந்தது. மேலும் இஸ்ராஃபீலின் முழக்கம் விண்ணில் ஒலித்துக் கொண்டிருந்தது. நான் எனது ஒட்டகத்தின் கடிவாளத்தை வேகமாக இழுத்தேன். அதனுடைய தலை முதுகுடன் இணைந்து விட்டது. நான் கடிவாளத்தை இலேசாக விட்டபோது அது மீண்டும் பின்நோக்கி ஓடியது. அப்போது நானும், மேலும் ஏராளமான தோழர்களும் வாள்களை உருவினோம். மேலும் ஒட்டகத்திலிருந்து குதித்தி விட்டோம். பலர் ஒட்டகத்தின் கழுத்துக்களை வெட்டி விட்டனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி ஓடத் தொடங்கி விட்டனர். மேலும் சில நொடிப்பொழுதிலேயே தன்னையும் அறியாமல் மக்காவை நோக்கி ஓடிக் கொண்டிருந்த பத்தாயிரம் சஹாபிகளைக் கொண்ட படை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கம் ஒன்று சேர்ந்து விட்டது. மேலும் சிறிது நேரத்திலேயே மலைகள் மீது ஏறி எதிரிகளை முற்றிலுமாக அழித்து விட்டது. இவ்வாறு இந்த அபாயகரமான தோல்வி ஒரு மகத்துவமிக்க வெற்றியின் வடிவில் மாறி விட்டது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 409, 410)

தாயிஃப் போர்: தாயிஃப் நகரம் என்பது மக்காவிலிருந்து கிழக்குப் பக்கம் சுமார் 90 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஒரு பிரபலமான நகரமாகும். ஹிஜாஸின் மலைப்புற நகரமாகும். அங்கு திராட்சைப் பழமும், ஏனைய கனிகளும் அதிகமாக இருந்து வந்தன. அந்த இடத்தில் பனூ சகீஃப் வசித்து வந்தனர்.

(சீரத் ஃபர்ஹின்ங் பக்கம் 178 – 2003 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

தாயிஃப் போர் குறித்து அறிவிப்பில் வருகின்றது. ஹவாஸின் மற்றும் சகீஃப்

கோத்திரத்தின் பெரும்பாலான தோற்றுப்போன நபர்கள் மாலிக் பின் அவ்ஃப் நஸ்ரி என்ற தமது தலைவருடன் இணைந்து தப்பியோடி தாயிஃப் நகரத்திற்கு சென்றிருந்தனர். மேலும் அங்கேயே கோட்டைக்குள் அடைபட்டிருந்தனர். எனவே இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஹுனைன் போரிலிருந்து திரும்பி வந்து ஜிஹ்ரானாவில் போர் செல்வங்களை ஒன்றுதிரட்டி பங்கிட்டுக் கொடுத்தார்கள். ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் தாயிஃப் நகரத்திற்கு செல்வதற்கு எண்ணம் கொண்டார்கள்.

(அர்ரஹீகுல் மக்தூம் பக்கம் 567 – லாஹுரில் அச்சிடப்பட்டது)

ஜிஹ்ரானா என்பது மக்கா மற்றும் தாயிஃப் நகரத்தின் வழிப்பாதையில் மக்காவிற்கு அருகில் அமைந்துள்ள ஒரு கிணற்றின் பெயராகும். மக்காவிலிருந்து அதன் தொலைவு 27 கி.மீ ஆக இருந்தது.

(சீரத் ஃபர்ஹின்ங் பக்கம் 88 – 2003 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃப் நகரத்தை எத்தனை நாட்கள் முற்றுகையிட்டிருந்தார்கள் என்பது பற்றி பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. சிலர் கூறுகின்றார்கள்: பத்திற்கும் மேற்பட்ட இரவுகள் முற்றுகையிட்டிருந்தார்கள். சிலர் கூறுகின்றார்கள்: அன்னார் (ஸல்) அவர்கள் 20–ற்கும் சற்று அதிகமான இரவுகள் முற்றுகையிட்டிருந்தார்கள். 20 நாட்கள் முற்றுகையிட்டிருந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுமார் 30 நாட்கள் தாயிஃப் நகர வாசிகளை முற்றுகையிட்டிருந்தார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 388 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்னு ஹிஷாம் அவர்கள் கூறுகின்றார்கள்: 17 இரவுகள் முற்றுகையிட்டிருந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது.

(அஸீரத்துன் நபவிய்யா லி இப்னீ ஷிஹாம் பக்கம் 792 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் முஸ்லிமில் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் 40 நாட்கள் வரை அவர்களை முற்றுகையிட்டிருந்தோம்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸகாத், ஹதீஸ் எண் 2442)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தாயிஃப் நகரத்தில் சகீஃப் கோத்திரத்தை முற்றுகையிட்டிருந்தபோது அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: அபூபக்ரே! நான் கனவில் இவ்வாறு கண்டேன். வெண்ணையால் நிறைந்த ஒரு பாத்திரம் எனக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் கோழி ஒன்று அதை கொத்தியபோது அந்த பாத்திரத்திருந்த அனைத்தும் வடிந்து விட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் (ஸல்) அவர்கள் இன்றைய நாள் அவர்களிடம் எந்த விஷயத்தை எதிர்பார்க்கின்றீர்களோ அதை தாங்கள் பெற்றுக் கொள்ள மாட்டீர்கள் என்று நான் கருதுகின்றேன்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நானும் அவ்வாறு நடப்பதாக பார்க்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள்: நான் மக்களிடம் இடம்பெயர்ந்து செல்வதற்கு அறிவித்து விடட்டுமா? கண்டிப்பாக என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களை இடம்பெயர்ந்து செல்லும்படி அறிவித்து விட்டார்கள். திரும்பிச் செல்வதற்கு அறிவித்து விட்டார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லி இப்னீ ஷிஹாம் பக்கம் 793 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தபூக் போர் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு ரஜப் மாதத்தில் நடந்தது. இது தொடர்பாக அறிவிக்கப்படுகின்றது. அதாவது தபூக் மதீனாவிலிருந்து வியாபாரக் குழுக்கள் பொதுவாக கடந்து செல்லக் கூடிய சிரியாவின் துறைமுகத்தில் அமைந்திருந்தது. மேலும் இது வாதியுல் குரா மற்றும் சிரியாவிற்கு மத்தியில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். அதனை சஹாபிகள் அஸ்ஹாவுல் அய்கா நகரம் என்றும் கூறப்படுகின்றது. அந்த நகரத்தில் ஹஸ்ரத் ஷுஐப் (அலை) அவர்கள் தோன்றியிருந்தார்கள்.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 14 – 1977 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஸாதிரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தபூக் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தபூக் போரில் பெரிய கொடியை அன்னார் (ரலி) அவர்களுக்கு வழங்கி இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 131 – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தபூக் போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒப்படைத்த அன்னாரின் செல்வத்தின் மொத்த மதிப்பு 4000 திர்ஹமாக இருந்தது.

(ஷரஹ் அல்லாமா ஸர்கானீ தொகுதி 4 பக்கம் 69 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சஹாபி பெருமக்களுக்கு தபூக் போரில் செல்வதற்கு தயாராகும்படி கட்டளை வழங்கியபோது அன்னார் (ஸல்) அவர்கள் மக்கா மற்றும் ஏனைய அரபு கோத்திரங்களுக்கு இந்த தூதுச் செய்தியை அனுப்பினார்கள். அதாவது அவர்களும் அன்னார் (ஸல்) அவர்களுடன் செல்ல வேண்டும் என்று கூறி இருந்தார்கள். அன்னார் (ஸல) அவர்கள் இறைவழியில் செலவு செய்வதற்கும், கால்நடை விலங்குகளை ஏற்பாடு செய்து கொடுப்பதற்கும் செல்வந்தர்களுக்கு அறிவுறுத்தி இருந்தார்கள். அதாவது அன்னார் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தை செய்யும்படி அவர்களுக்கு வலியுறுத்தி கட்டளை வழங்கினார்கள். இது அன்னார் (ஸல்) அவர்களின் இறுதிப் போராகும். எனவே அந்த சந்தர்ப்பத்தில் எந்த நபர் முதன் முதலில் செல்வத்தை எடுத்துக் கொண்டு வந்தாரோ அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களாக இருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் தனது வீட்டிலிருந்த அதாவது 4000 திர்ஹம்களையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் உங்களது குடும்பத்தினருக்காகவும் எதையும் விட்டு விட்டு வந்துள்ளீர்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வையும், அவனது தூதரையும் குடும்பத்தினருக்காக விட்டு விட்டு வந்துள்ளேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) தனது வீட்டிலிருந்து பாதி செல்வத்தை எடுத்துக் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், உங்களின் குடும்பத்தினருக்காக எதையும் விட்டு விட்டு வந்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு பாதியை விட்டு விட்டு வந்துள்ளேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் 100 அவ்கியாவை வழங்கினார்கள். இது சுமார் 4000 திர்ஹம் ஆகும். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உஸ்மான் பின் அப்பான் மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோர் பூமியிலுள்ள அல்லாஹ்வின் கருவூலங்களைச் சார்ந்த கருவூலங்கள் ஆவர். அவர்கள் அல்லாஹ்வின் திருப்திக்காக செலவு செய்கின்றனர். அவர்கள் ஏராளமான செல்வத்தை வழங்கியுள்ளனர். அந்த சந்தர்ப்பத்தில் பெண்களும் தங்களது நகைகளை வழங்கினர். மேலும் ஹஸ்ரத் ஆஸிம் பின் அதீ (ரலி) அவர்கள் 70 விஸ்க் பேரீத்தம் பழங்களை வழங்கினார்கள். அது சுமார் 262 மன் அளவு எடை கொண்டதாகும்.

(அஸீரத்துன் ஹலபிய்யா தொகுதி 3 பக்கம் 183, 184 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

1 மன் 40 கிலோ என்று கணக்கிட்டால் சுமார் 1500 அதாவது 1 டன்னையும் விட கூடுதலாகும். சுமார் 1.5 டன் அளவு ஆகும்.

ஸைது பின் அஸ்லம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களை இவ்வாறு கூறக் கேட்டேன். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எங்களுக்கு சதகா கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். அந்த நேரத்தில் எங்களிடத்தில் செல்வம் இருந்தது. இன்றைய தினம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட நான் முந்திச் செல்வேன். என்னால் எப்போதாவது அன்னாரை முந்த முடியும் என்றால் அது இன்றைய தினம் ஆகும் என்று நான் கூறினேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் எனது பாதி செல்வத்தை கொண்டு வந்தேன். அப்போது

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமது குடும்பத்தினருக்காக எதை விட்டு விட்டு வந்துள்ளீர்? என்று கேட்டார்கள். அதற்கு நான் இதே அளவிலான செல்வத்தை வீட்டில் விட்டு விட்டு வந்துள்ளேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எவ்வளவு கொண்டு வந்துள்ளேனோ அதே அளவிலான செல்வத்தை குடும்பத்தினருக்காக விட்டு விட்டு வந்துள்ளேன். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) கூறுகின்றார்கள்: அவர் அவரிடமிருந்த அனைத்தையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! நீங்கள் உங்களது குடும்பத்தினருக்காக எதனை விட்டு விட்டு வந்துள்ளீர்? என்று கேட்டார்கள். அதற்கு நான் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் அவர்களுக்காக விட்டு விட்டு வந்துள்ளேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) கூறுகின்றார்கள்: நான் கூறினேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! இனி எந்த விஷயத்திலும் ஒருபோதும் என்னால் அன்னாரை விட முந்திச் செல்ல முடியாது.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப், ஹதீஸ் எண் 3675)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறை மார்க்கத்திற்காக மக்கள் ஆடுகளைப் போன்று தமது உயிர்களை அர்ப்பணித்து வந்தார்கள். அது ஒரு காலமாக இருந்தது. பொருளாதார குறிப்பு ஒரு பக்கம் இருக்கட்டும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒன்றிற்கும் அதிகமான முறை தனது அனைத்து செல்வத்தையும் அர்ப்பணித்து விட்டார்கள். எந்த அளவுக்கென்றால் ஊசியைக் கூட தமது வீட்டில் வைக்கவில்லை. அதேபோன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது திறந்த மனத்திற்கேற்பவும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது ஆற்றல் மற்றும் தகுதிக்கேற்பவும் عَلٰى هٰذَا الْقِيَاسِ عَلٰى قَدْرِ مَرَاتِب என்பதற்கேற்ப ஏனைய அனைத்து சஹாபிகளும் தமது உயிர்களையும், செல்வங்களையும் இந்த இறை மார்க்கத்திற்காக அர்ப்பணிப்பதற்கு தயாராகி விட்டார்கள்.

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைஅத் செய்யக் கூடியவர்களை குறித்து இவ்வாறு கூறுகின்றார்கள்: ஒருவகைப்பட்ட மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் பைஅத் செய்து விடுகிறார்கள். நாங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்று உடன்படிக்கையும் செய்து கொள்கின்றார்கள். ஆனால் உதவி மற்றும் ஒத்தாசையின் சந்தர்ப்பத்தில் தமது சட்டைப் பைகளை அழுத்தி பிடித்து வைத்துக் கொள்கின்றார்கள். இதுபோன்ற நேசத்தால் எவராலும் மார்க்க நோக்கத்தை அடைய முடியுமா? அதுபோன்ற மக்களால் ஏதாவது பயன் கிடைக்க முடியுமா? ஒருபோதும் கிடையாது. ஒருபோதும் கிடையாது.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

உங்களுக்கு விருப்பமான செல்வத்தை செலவிடாத வரை உங்களின் நன்மைகள் நன்மைகளாக இருக்காது.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 40 அடிக்குறிப்பு)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து ஒரு சஹாபியை நல்லடக்கம் செய்தது தொடர்பாக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: தபூக் போரில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். ஒரு முறை பாதி இரவில் எழுந்தேன். நான் படையின் பக்கம் நெருப்பின் வெளிச்சத்தை கண்டேன். எனவே நான் அதன் பக்கம் சென்றேன். அது என்னவென்று பார்ப்பதற்காக சென்றேன். அப்போது நான் கண்டேன். இறைத்தூதர் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருக்கின்றார்கள். மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் துல்பிஜாதைன் முஸன்னி (ரலி) மரணமடைந்து விட்டதை நான் கண்டேன். இந்த மக்கள் அவருக்காக கபரை தோண்டிக் கொண்டிருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கபருக்குள் இருந்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் அவரது மையத்தை பிடித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கம் இறக்கிக் கொண்டிருந்தார்கள். நீங்கள் இருவரும் உங்களது சகோதரரை எனக்கு அருகில் வையுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறிக் கொண்டிருந்தார்கள். எனவே அவர்கள் இருவரும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் துல்பிஜாதைன் சஹாபியின் மையத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கம் இறக்கினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் அவரை கபரில் வைத்து விட்டார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ اِنِّیْ اَمْسَيْتُ رَاضِيًا عَنْهُ فَارْضَ عَنْهُ

பொருள்: அல்லாஹ்வே! இவரிடம் நான் திருப்தி கொண்ட நிலையில் நான் மாலைப்பொழுதை அடைந்தேன். எனவே நீயும் இவரிடம் திருப்தி கொள்வாயாக.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இந்த கபரைச் சார்ந்தவராக நான் இருந்திருக்கக் கூடாதா? என்று அப்போது நான் ஆசை கொண்டேன்.

(சீரத் இப்னு ஷிஹாம் பக்கம் 882 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் துல்பிஜாதைன் (ரலி) அவர்கள் பனூ முஸையனா கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். அன்னார் தொடர்பாக இவ்வாறு வருகின்றது. அன்னார் சிறியவராக இருந்தபோது அன்னாரின் தந்தை மரணமடைந்து விட்டார்கள். அன்னாருக்கு தந்தையின் சொத்திலிருந்து எதுவும் கிடைக்கவில்லை. அன்னாரின் சிறிய தந்தை செல்வந்தராக இருந்தார். அந்த சிறிய தந்தை அன்னார் (ரலி) அவர்களை வளர்த்தார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் (ரலி) அவர்களும் செல்வந்தராகி விட்டார்கள். அன்னார் மக்கா வெற்றிக்குப் பிறகு இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். அப்போது அன்னாரின் சிறிய தந்தையார் அன்னாரிடமிருந்து அனைத்தையும் பெற்றுக் கொண்டார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் (ரலி) அவர்களின் கீழாடையையும் கூட வாங்கிக் கொண்டார்கள். பின்னர் அன்னார் (ரலி) அவர்களின் தாயார் வந்தார்கள். அன்னார் தமது போர்வையை இரண்டு பகுதிகளாக பிரித்தார்கள். மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அதில் ஒரு பகுதியை கீழாடையாக பயன்படுத்திக் கொண்டார்கள். இரண்டாவது பகுதியை மேலே உடுத்திக் கொண்டார்கள். பின்னர் அன்னார் (ரலி) மதீனாவிற்கு வந்தார்கள். பள்ளிவாசலில் உறங்கி விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சுபுஹ் தொழுகையை தொழுதார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுபுஹ் தொழுகையை முடித்த பிறகு இவர்கள் யார்? என்று மக்களை ஆழமாக உன்னிப்பாக கவனித்து வந்தார்கள். புதிய மனிதர்களாக இருக்கின்றார்கள் என்று உற்று நோக்கினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களை பார்த்தார்கள். அவர்களை புதியவராக கண்டார்கள். நீங்கள் யார்? என்று ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) தனது குடும்ப பரம்பரையை எடுத்துரைத்தார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. அதாவது எனது பெயர் அப்துல் உஸ்ஸா என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதற்கு நீங்கள் அப்துல்லாஹ் துல்பிஜாதைன் அதாவது இரண்டு போர்களை கொண்டவர்களா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் நீங்கள் எனக்கு அருகிலேயே இருந்து வாருங்கள் என்றும் கூறினார்கள். எனவே இறைத்தூதர் (ஸல்) அவர்களின் விருந்தினர்களை சார்ந்தவராக அன்னார் இருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்து வந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் (ஸல்) ஏராளமான திருக்குர்ஆனின் பகுதியை மனனம் செய்து விட்டார்கள். மேலும் அன்னார் (ரலி) உரத்த குரலுடைய நபராக இருந்தார்கள்.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 459, 460 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் அமாரத் (தலைமை) குறித்த குறிப்பு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களை அல்ஹஜ்ஜின் அமீராக ஆக்கி மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். இது தொடர்பாக இவ்வாறு விளக்கம் கிடைக்கின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்பி வந்தபோது அன்னார் (ஸல்) அவர்கள் ஹஜ் செய்வதற்கு எண்ணம் கொண்டார்கள். இணை வைப்பவர்கள் ஏனைய மக்களுடன் இணைந்து ஹஜ் செய்கின்றார்கள் என்று அன்னார் (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. அங்கு இணை

வைப்பவர்களும் இருப்பார்கள். ஷிர்க்கான வார்த்தைகளையும் கூறுவார்கள். நிர்வாணமாக கஃபத்துல்லாஹ்வை வலம் வருவார்கள் என்று கூறப்பட்டது.

இதை செவியுற்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அந்த வருடம் ஹஜ் செய்வதற்கான எண்ணத்தை விட்டு விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களை ஹஜ்ஜின் அமீராக நியமித்து அனுப்பி வைத்தார்கள்.

(உம்தத்துல் காரி, கிதாபுல் ஹஜ் தொகுதி 9 பக்கம் 384 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் 300 சஹாபிகளுடன் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருடன் 20 குர்பானி கால்நடைகளை அனுப்பி வைத்தார்கள். அந்த கால்நடைகளின் கழுத்துக்களில் குர்பானியின் அடையாளமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கரத்தால் சில மாலைகளை அணிவித்தார்கள். மேலும் அடையாளமிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களும் தன்னுடன் 5 குர்பானி விலங்குகளை கொண்டு சென்றார்கள்.

(அஸீரத்துன் ஹலபிய்யா தொகுதி 3 பக்கம் 295 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த அறிவிப்பில் வருகின்றது. அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஜ் சந்தர்ப்பத்தின்போது சூரா தவ்பாவின் ஆரம்ப வசனங்களை அறிவிப்பு செய்தார்கள். அந்த அறிவிப்பு இவ்வாறாகும்: அதாவது அபூஜஃபர் முஹம்மது பின் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சூரா பராத் (சூரா தவ்பா) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மீது இறங்கியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களை ஹஜ்ஜிற்கு அமீராக அனுப்பி இருந்தார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த சூராவை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் அங்கு ஓதுவதற்காக அன்னாருக்கு இதனை அனுப்பி வையுங்கள் என்று கூறப்பட்டது.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எனது குடும்பத்தைச் சார்ந்தவர்களில் ஒருவரைத் தவிர வேறு எவரும் இந்த கடமையை என் சார்பாக நிறைவேற்ற முடியாது. பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும் சூரா தவ்பாவின் ஆரம்பத்தில் கூறப்பட்டவற்றை கொண்டு செல்லுங்கள்.

குர்பானி நாளன்று மக்கள் மனாவில் ஒன்றுகூடியிருக்கும்போது அவர்களிடம் இந்த அறிவிப்பை செய்து விடுங்கள். சொர்க்கத்தில் எந்த நிராகரிப்பாளரும் நுழைய மாட்டார். மேலும் இந்த வருடத்திற்குப் பிறகு எந்த இணை வைப்பவருக்கும் ஹஜ் செய்வதற்கு அனுமதி கிடையாது. மேலும் அதேபோன்று நிர்வாணமான உடலுடன் பைத்துல்லாஹ்வை வலம் வருவதற்கு அனுமதியும் கிடையாது. எவருடைய கையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏதாவதொரு உடன்படிக்கை இருக்குமோ அதற்குரிய காலக்கெடு முழுமை செய்யப்படும்.

ஹஸ்ரத் அலீ பின் அபி தாலிப் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பெண் ஒட்டகமான அல்பா மீது சவாரி செய்து புறப்பட்டார்கள். வழிப்பாதையிலேயே ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களை சந்தித்தார்கள். அர்ஜ் அல்லது லப்ஹான் பள்ளத்தாக்கில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை சந்தித்தார்கள். அர்ஜ் என்பது மதீனா மற்றும் மக்காவிற்கு இடையிலான பாதையில் அமைந்துள்ள ஓர் ஊராகும். அங்கு பயணக் குழுக்கள் தங்குவார்கள். லஜ்னான் மதீனாவின் வழிப்பாதையில் மக்காவின் சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள ஓர் இடமாகும். அது மக்காவிலிருந்து 25 மைல் தொலைவில் உள்ளது. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை வழிப்பாதையில் கண்டார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் உடனடியாக கூறினார்கள்: தாங்கள் அமீராக நியமிக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது நீங்கள் எனக்கு கீழ் இருக்கின்றீர்களா? என்று கேட்டார்கள்.

இது பணிவின் உச்சமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பியுள்ளார்கள். எனவே தற்போது நீங்கள் அமீராக இருக்கின்றீர்களா? அல்லது எனக்கு கீழ் இந்த பயணக் குழுவில் செல்வீர்களா? பணி செய்வீர்களா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் நான் தங்களுக்கு கீழே இருப்பேன் என்று கூறினார்கள். பின்னர் இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஹஜ் விவகாரத்தில் மக்களின் விவகாரங்களை கண்காணித்தார்கள். மேலும் இந்த வருடம் அறிவீனமான காலத்தில் அரபுவாசிகள் எங்கு முகாமிட்டிருந்தார்களோ அதே இடத்திலேயே முகாமிட்டிருந்தார்கள். குர்பானி கொடுப்பதற்கான நாள் வந்தபோது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் எந்த விஷயத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டிருந்தார்களோ அந்த விஷயத்தை அறிவித்தார்கள்.

அன்னார் கூறினார்கள்: மக்களே! சொர்க்கத்தில் எந்த நிராகரிப்பாளரும் நுழைய முடியாது. மேலும் இந்த வருடத்திற்குப் பிறகு இணை வைப்பவர் எவரும் ஹஜ் செய்ய மாட்டார். மேலும் பைத்துல்லாஹ்வை நிர்வாண உடலுடன் வலம் வருவதற்கு எவருக்கும் அனுமதி இருக்காது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யாருடனெல்லாம் ஏதாவது உடன்படிக்கை செய்திருந்தார்களோ அதன் காலக்கெடு முழுமை செய்யப்படும். இந்த அறிவிப்பின் நாளிலிருந்து ஒவ்வொரு சமுதாயமும் தமது பாதுகாப்பிற்குரிய இடங்களையோ அல்லது தமது பகுதிகளின் பக்கமோ திரும்பிச் செல்வதற்கு மக்களுக்கு நான்கு மாதங்கள் வரை காலக்கெடு வழங்கப்பட்டது. அதன் பிறகு எந்தவொரு இணை வைப்பவருக்கும் எந்த உடன்படிக்கையும் இருக்காது. மேலும் எந்தப் பொறுப்பும் இருக்காது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமுள்ள ஒரு காலகட்டம் வரை அமைந்துள்ள உறுதிமொழி அல்லது உடன்படிக்கையை தவிர. அதாவது எந்த உடன்படிக்கைக்கான காலக்கெடு இன்னும் எஞ்சியிருக்குமோ மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் செய்யப்பட்ட ஏதாவது உடன்படிக்கை இருக்குமோ அதற்கு குறிப்பிட்ட காலம் வரை அது கருத்தில் கொள்ளப்படும். இந்த உடன்படிக்கைகளைத் தவிர வேறு எந்த புதிய உடன்படிக்கையும் செய்யப்பட மாட்டாது. மேலும் அந்த வருடத்திற்குப் பிறகு எந்த இணை வைப்பவரும் ஹஜ் செய்யவுமில்லை. மேலும் நிர்வாணமாக எந்தவொரு நபரும் தவாஃப் செய்யவுமில்லை.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் அர்ஃபா என்ற இடத்திற்கு வந்தார்கள். அன்னார் (ரலி) மக்களிடம் சொற்பொழிவாற்றினார்கள். அன்னார் சொற்பொழிவாற்றி முடித்த பிறகு என் பக்கம் கவனம் செலுத்தியவாறு, அலியே! இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை எழுந்து நின்று எட்ட வைப்பீராக என்று கூறினார்கள். எனவே நான் எழுந்து நின்றேன். மேலும் நான் சூரா பராத்தின் 40 வசனங்களை ஓதிக் காட்டினேன். பின்னர் அவர்கள் இருவரும் அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் சென்று விட்டார்கள்.

(சபலுல் ஹுதா தொகுதி 12 பக்கம் 73 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 515 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த நற்குறிப்பு இன்னும் நடைபெறும். தற்போது நான் ஒரு மர்ஹூமைப் பற்றிய நற்குறிப்பை செய்ய விரும்புகின்றேன். கடந்த நாட்களில் மரணமடைந்தவர்களின் ஜனாஸா தொழுகையையும் இன்ஷா அல்லாஹ் தொழ வைப்பேன்.

மதிப்பிற்குரிய அமத்துல் லத்தீஃப் குர்ஷீத் சாஹிபா கனடாவில் இருந்தார்கள். அன்னார் அல்ஃபஸல் ரப்வாவின் துணை ஆசிரியரான மர்ஹூம் ஷேக் குர்ஷீத் அஹ்மது சாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். 85 வது வயதில் கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் மியான் ஃபஸல் முஹம்மது சாஹிப் அவர்களின் மகள்வழிப் பேத்தியாகவும், ஹஸ்ரத் ஹகீமுல்லாஹ் பக்ஷ் சாஹிப் மற்றும் ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களின் மகள்வழிப் பேத்தியும் ஆவார்கள். மேலும் மதிப்பிற்குரிய காதியான் தர்வேஷ் மியான் அப்துர் ரஹீம் தயானத் சாஹிப் மற்றும் ஆமீனா பேகம் சாஹிபா ஆகியோரின் மகளாகவும் மர்ஹூமா இருந்தார்கள். நுஸ்ரத் கேல்ஸ் ஸ்கூல் காதியானிலிருந்து அன்னார் மிடில் கிளாஸ் தேர்ச்சி பெற்றார்கள். பின்னர் ஜாமிஆ நுஸ்ரத்தில்

1943 அல்லது 1944 ஆம் ஆண்டு சேர்ந்தார்கள். இரண்டு ஆண்டுகள் ஜாமிஆ நுஸ்ரத்தில் படித்தார்கள். பின்னர் தனியாரில் படித்து இலக்கிய அறிஞருக்கான தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள்.

நான் கூறியதுபோன்று அன்னாரின் திருமணம் அல்ஃபஸ்ல் பத்திரிகையின் உதவி ஆசிரியரான ஷேக் குர்ஷீத் சாஹிப் அவர்களுடன் நடந்தது. அன்னாரின் திருமணத்தை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா அவர்கள் முபாரக் பள்ளிவாசலில் நடத்தினார்கள். அல்லாஹ் அன்னாருக்கு 3 மகன்களையும், 2 மகள்களையும் வழங்கினான். அன்னார் ஜமாஅத்தின் முரப்பியும் இன்றைய நாட்களில் இங்கு லண்டனில் பணி செய்து வந்த அப்துல் பாஸித் சாஹிப் அவர்களின் சகோதரி ஆவார்கள். நீண்ட காலமாக பாஸித் சாஹிப் ஆஃப்ரிக்காவிலும் இருந்தார்கள். அன்னாரின் ஒரு மகன்வழிப் பேரன் வகாஸ் அஹ்மது குர்ஷீத் சாஹிப் அவர்களும் அமெரிக்காவில் ஜமாஅத்தின் முரப்பியாக உள்ளார்கள். இந்த குடும்பம் மிகவும் கல்வியறிவு பெற்ற குடும்பமாகும். மர்ஹூமாவின் மற்றொரு சகோதரியான அமத்துல் பாரி நாஸிர் சாஹிபா அவர்களும் உள்ளார்கள். அன்னாரும் கல்விப் பணிகளில் தொண்டாற்றி வருகின்றார்கள்.

அமத்துல் லத்தீஃப் சாஹிபா 13 வது வயதில் லஜ்னா இமாயில்லாஹ்வின் பல்வேறு பொறுப்புகளில் தொண்டாற்ற தொடங்கி விட்டார்கள். அன்னார் ஆற்றிய தொண்டுகளின் தொடர் 70 ஆண்டுகள் நீண்டதாக உள்ளது. அன்னாருக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா அவர்களின் வழிகாட்டல்கள் ஹஸ்ரத் உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஸய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா அவர்களின் தலைமையிலும், மேலும் பல்வேறு சான்றோர்களின் மேற்பார்வையிலும் பணி செய்வதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. காதியானில் தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்தது.

பின்னர் இந்திய பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சிறிய ஆப்பாவின் வழிகாட்டலுக்கேற்ப இன்சார்ஜ் என்ற முறையில் தொண்டாற்றுவதற்கு நற்பேறு அன்னாருக்கு கிடைத்துள்ளது. அதேபோன்று பல்வேறு பொறுப்புகளின் அடிப்படையில் லஜ்னா அமைப்பிற்கு தொண்டாற்றும் நற்பேறை பெற்றுள்ளார்கள். நீண்ட காலமாக இஷாஅத் செயலராகவும் இருந்துள்ளார்கள். மிஸ்பாஹ் பத்திரிகையின் ஆசிரியராக 1979 முதல் 1986 வரை இருந்தார்கள். 1986 முதல் அன்னார் கனடாவில் தங்கி இருந்தார்கள். அங்கும் லஜ்னா இமாயில்லாஹ்வின் கௌரவ ஆலோசகராக இருந்தார்கள். தஸ்னீஃப் மற்றும் வெளியீட்டுத் துறையில் லஜ்னா இமாயில்லாஹ்வின் வரலாறின் முதல் 4 தொகுதிகளையும், அல்மஸாபீஹ் அல்அஸ்கார் போன்ற நூல்களையும் தொகுக்கின்ற பணியிலும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க நற்பேறு பெற்றார்கள்.

ஹஸ்ரத் சிறிய ஆப்பா அவர்களுடன் 44 ஆண்டுகள் பணி செய்வதற்கு நற்பேறு கிடைத்தது. அன்னாருடைய மேற்பார்வையில் நாஸிராத்துல் அஹ்மதிய்யாவின் முதலாவது இஜ்திமா நடந்தது. அமத்துல் லத்தீஃப் சாஹிபா நாஸிராத் செயலராகவும் இருந்துள்ளார்கள். அப்போது அன்னார் தமது கணவரான ஷேக் குர்ஷீத் சாஹிப் அவர்களின் தோழமையில் ராஹே ஈமான் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சுருக்கமான வரலாறு போன்ற நூல்களை தொகுத்தார்கள்.

அன்னாரின் மகன் லயீக் அஹ்மது குர்ஷீத் சாஹிப் கூறுகின்றார்கள்: மர்ஹூமா தாயார் அவர்கள் தமது குடும்பத்தில் எல்லா பிள்ளைகளுடனும் ஓர் ஆழமான பாடத்தை கற்பித்திருந்தார்கள். அதாவது ஜமாஅத் அல்லது கிலாஃபத்திற்கு எதிராக ஏதாவது விஷயம் பேசப்பட்டால் அதனை ஒருபோதும் கேட்கக் கூடாது. காதில் விஷயம் பட்டு விட்டாலும் அதை ஒருபோதும் மீண்டும் கேட்கக் கூடாது. வாயில் அதனை பேசக் கூடாது. ஏனென்றால் அல்லாஹ்வின் சிறப்பான உதவிகள் கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் இருக்கின்றது என்று மர்ஹூமா கூறினார்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்: ஒவ்வொரு சோதனை மற்றும் குழப்பத்திற்குப் பிறகு இறைவனின் அடையாளங்கள் ஜமாஅத்திற்கு ஆதரவாக வெளிப்படுகின்றன. எனவே நீங்கள் காரணமின்றி தேவையில்லாமல் குழப்பங்களில் பங்கு பெற்று விட வேண்டாம்.

அவர் தொடர்ந்து எழுதுகின்றார்: மர்ஹூமா ஜமாஅத்தில் சுற்றித்திரிந்த வரலாறாக இருந்தார்கள். எல்லாரையும் சிரித்த முகத்துடன் சந்திப்பவராகவும், அனைவருக்கும் நன்மையை விரும்பக் கூடியவராகவும் இருந்தார்கள். முழுமையாக நம்பிக்கை கொண்டவராகவும் இருந்தார்கள். படைப்பின சேவையில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார்கள். புதிதாக வரக் கூடிய அதாவது கனடாவிற்கு வருகை தந்த ஏராளமான முஹாஜிர் விருந்தினர்களை தங்க வைப்பதில் மிகவும் சுறுசுறுப்புடன் பங்கு பெற்று வந்தார்கள்.

அடுத்து அன்னாரின் ஒரு பிள்ளை எழுதுகின்றார்: எங்களது தாயார் கிலாஃபத்தின் மீது மிகவும் உணர்வுப்பூர்வமான அன்பு கொண்டிருந்தார்கள். எப்போதும் காலத்தின் கலீஃபாவிற்காக துஆ செய்வதற்கு வலியுறுத்தி வந்தார்கள். மேலும் எங்களுக்கு நினைவூட்டி வந்தார்கள். தொழுகைகளை மிகவும் பேணி வந்தார்கள். உரிய ஏற்பாட்டுடன் நிறைவேற்றி வந்தார்கள். ஜுமுஆ நாள் ஒரு பெருநாளைப் போன்று இருந்து வந்தது.

திருக்குர்ஆன் மீது கொண்டிருந்த அன்பைப் பற்றி அவர் கூறுகின்றார்: மர்ஹூமா எண்ணற்ற பிள்ளைகளுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்தார்கள். சரியான உச்சரிப்பை செய்வதற்கு வலியுறுத்தி வந்தார்கள்.

அன்னாரின் மகள்வழிப் பேரனும் முரப்பியுமான வகாஷ் குர்ஷீத் சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்: எப்போதும் துஆவின் பக்கமும், படிப்பின் பக்கமும் கவனமூட்டி வந்தார்கள். ஜமாஅத்தின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு கதைகளின் மூலம் பிள்ளைகளுக்கு சிறந்த வடிவில் தர்பிய்யத் கிடைப்பதற்கு ஏதுவாக ஜமாஅத்தின் வரலாற்றை கற்றுக் கொடுத்து வந்தார்கள்.

அன்னாரின் ஒரு மகள்வழிப் பேத்தி இவ்வாறு கூறுகின்றார்கள்: எங்களது தந்தைவழிப் பாட்டிக்கு 9 மகன்வழிப் பேத்திகள் கிடைத்திருந்தனர். அன்னார் பெண் பிள்ளைகளான எங்களுக்கு தர்பிய்யத் மட்டும் வழங்கவில்லை. நாங்கள் லஜ்னா இமாயில்லாஹ்வில் தொண்டாற்றுபவர்களாக மட்டும் ஆகவில்லை. மாறாக, அதபுகளையும் சரியான பர்தாவையும் எப்படி பேண வேண்டும் என்பதையும் எங்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள். குடும்பத்தை பராமரிப்பது, விருந்து உபசரிப்பது, தையல், உருதுவில் எழுதுவது, படிப்பது போன்ற இந்த அனைத்து விஷயங்களைக் குறித்தும் எங்களுக்கு நிரந்தரமாக கற்றுக் கொடுத்து வந்தார்கள். நாங்கள் பருவமடைந்து திருமணமாகிய பிறகு அன்னார் எங்களுக்கு எங்களது கணவர்மார்களுடனும், கணவர்மார்களின் உறவினர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு அறிவுறுத்தி வந்தார்கள். நாங்கள் எங்களுடைய கணவரின் குடும்பத்தினருடன் நல்ல முறையில் நேரத்தை கழித்தோம் என்று அவர்களிடம் கூறும்போது அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். இந்த கடமைகளுடன் அன்னார் எங்களுக்கு நல்ல கல்வி பெற்றவராக திகழ்வதற்கும் நல்ல கேரியர்களை உருவாக்குவதற்கும் கவனமூட்டி வந்தார்கள். பிறந்த நாள் கொண்டாடாமல் இருப்பது மேலும் இஸ்லாத்திற்கு மாற்றமான விஷயங்களிலிருந்து விலகியிருப்பது போன்ற விவகாரங்களில் உறுதியுடன் நிலைநின்றார்கள். ஆயினும் அன்னார் பிறந்த நாள் மற்றும் சிறப்பான சந்தர்ப்பங்களை நினைவிற்குரியதாகவும் ஆக்கினார்கள். ஏனென்றால் அன்னார் எப்போதும் எங்களை ஒரு குடும்பத்தைப் போன்று ஒன்றுகூட்டி ஹம்தோ ஸனா கவிதையை படிப்பதற்கும், ஜமாஅத்தாக துஆக்கள் செய்வதற்கும் கூறி வந்தார்கள்.

பின்னர் அன்னார் கூறுகின்றார்கள்: கனடாவில் அஹ்மதி முஸ்லிம் என்ற முறையில் அன்னார் எங்களின் பராமரிப்பில் ஒரு கண்டிப்பான பங்காற்றியுள்ளார்கள். நாங்கள் எங்களது ஈமான் மற்றும் மேற்கத்திய சுற்றுப்புறத்தை எவ்வாறு கவனமான வழிமுறையில் சரி சமமாக பேண வேண்டும் என்பதையும் கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

ஆக புதிய தலைமுறைகளை பாதுகாப்பதற்கு தாய்மார்களும், சான்றோர்களும் ஆற்ற வேண்டிய அவசியமான பணி இதுவே ஆகும். புதிய தலைமுறையினருக்கு தர்பிய்யத் வழங்க வேண்டும். அவர்களுக்கும் மார்க்கத்தை கற்றுக் கொடுக்க வேண்டும். இந்த சமூகத்தில் வசித்தவர்களாக இருந்து கொண்டு எந்த வித தாழ்வு மனப்பான்மையும் இன்றி தங்களை அட்ஜெட்ஸ்மென்ட் செய்து கொள்வதன் பக்கம் கவனமூட்ட வேண்டும்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் சந்ததிகளுக்கு அன்னாரின் பிள்ளைகளுக்கு நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 24 March 2022 Issue No. 12

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*மல்ஃபூஸாத் (முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

(வழிதவறியவர்களாக) இருந்தனர். தற்போது அவர்கள் வழிதவறச் செய்யக் கூடியவர்களாகவும் ஆகி விட்டனர். இறைவனின் வல்லமையின் மீது பார்வை செலுத்துவதால் தெரிய வருகின்றது. அதாவது விஷயம் எல்லைமீறி விடும்போது வானத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. அந்த தயாரிப்பிற்கான நேரம் வந்து விட்டது என்பதற்கு இதுவே அடையாளமாகும். நிச்சயம் அந்த நேரம் வர வேண்டும். உண்மையான நபி, தூதர், முஜத்தித் ஆகியோரின் மாபெரும் அடையாளம் இதுவே ஆகும். அதாவது அவர்கள் குறித்த நேரத்தில் வர வேண்டும். தேவையின்போது வர வேண்டும். வானத்தில் ஏதாவது ஏற்பாடு செய்வதற்கு இது நேரம் இல்லையா? என்று மக்கள் சத்தியம் செய்து கூறுவார்கள். ஆனால் நினைவிற் கொள்ளுங்கள்! இறைவன் அனைத்தையும் சுயமே செய்கின்றான். நாமும், எமது ஜமாஅத்தும், அனைவரும் அறைகளுக்குள் அமர்ந்து கொண்டாலும் கூட பணி நடந்து விடும். தஜ்ஜால் வீழ்ச்சியுறுவான்.

تِلْكَ الْاَيَّامُ نُدَاوِلُهَا بَيْنَ النَّاسِ தற்போது அதன் வீழ்ச்சிக்கான நேரம் வந்து விட்டது என்பதை இந்த வசனம் கூறுகின்றது. தற்போது அவன் வீழ்ச்சியை பார்ப்பான் என்பதை தற்போதைய காலகட்டம் வெளிப்படுத்துகின்றது. அவனது குடியேற்றம் அவனது அழிவின் அடையாளமாகும். ஆம்! குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியுள்ளது. இறைவனின் பணி மெதுவாகவே நடைபெறும்.

ஒருவேளை எம்மிடம் எந்த சான்றுமே இல்லையென்றாலும் கூட மஸீஹ் இன்னும் ஏன் வரவில்லை என்று முஸ்லிம்கள் பைத்தியக்காரர்களைப் போன்று சுற்றித்திரிந்து தேடியிருக்க வேண்டும். இவர் சிலுவையை முறிப்பதற்காக வந்துள்ளார். தமது சண்டைகளை தீர்த்து வைப்பதற்காக அவரை அவர்கள் அழைத்திருக்க வேண்டாமா? அவரது பணி சிலுவையை முறித்தல் ஆகும். அதுவே காலத்தின் தேவை ஆகும். அதன் காரணமாகவே அவரது பெயர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகும். முல்லாக்களுக்கு மனித இனத்தின் முன்னேற்றமே நோக்கம் என்றால் அவர்கள் ஒருபோதும் அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள். நாம் ஃபத்வா கொடுத்து என்ன சாதித்து விட்டோம்? என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும். எந்தப் பணி நடக்க வேண்டும் என்று இறைவன் கூறி இருக்கின்றானோ அது நடக்கக் கூடாது என்று எவர் கூற முடியும்? கிழக்கிலும், மேற்கிலும் எமது விஷயத்தை சென்றடையச் செய்வதற்கு எமது இந்த எதிரிகள் எமது ஊழியர்களாக இருக்கின்றனர்.

கோல்டே வாலா பீர் என்பவர் எமக்கு எதிராக ஒரு புத்தகத்தை எழுத இருக்கின்றார் என்பதை தற்போது நாம் கேள்வியுற்றோம். அதனால் நாம் மகிழ்ச்சியடைந்தோம். ஏனெனில் அவரது சீடர்களில் எவருக்கு செய்தி தெரியாதோ அவருக்கும் செய்தி கிடைத்து விடும். மேலும் அவர்களுக்கு எமது புத்தகங்களைப் பார்ப்பதற்கு ஓர் ஆர்வம் உருவாகி விடும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 358 – 360 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

*முதல் பக்கத்தின் தொடர்ச்சி... ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்று...*

(3) மஃரூஃபிற்கு கொள்ளப்படும் பொருள் ஃபீ என்பதற்கும் கொள்ளப்பட வேண்டும். அந்த நிலையில் இந்த சொற்களுக்கு இவ்வாறு பொருள் அமையும். அதாவது அவர்கள் அல்லாஹ்விடம் இருந்து கொண்டு ஹிஜ்ரத் செய்தார்கள். அதாவது முற்றிலுமாக அல்லாஹ்வை தமது பொறுப்பாளராக ஆக்கிக் கொண்டார்கள். மேலும் அவனது பண்புகளை மேற்கொண்டு விட்டார்கள். மேலும் தனது நஃப்ஸை அழித்து தனது ஒவ்வொரு பணியையும் அல்லாஹ்விற்காக ஆக்கிக் கொண்டார்கள். எனவே அவர்கள் மக்காவிலிருந்து புறப்படுவது சில மனிதர்கள் புறப்படுவது போன்று அல்ல. இன்னும் கூறப்போனால் அல்லாஹ்வே மக்காவிலிருந்து வெளியேறி விட்டான் என்பதைப் போன்றதாகும். அவர்கள் சென்றதுடன் அல்லாஹ்வும் மக்காவாசிகளிலிருந்து வெளியேறி விட்டான். مِنْۢ بَعْدِ مَا ظُلِمُوْا அதாவது அவர்களின் ஹிஜ்ரத் எந்த காரணமும் இல்லாமல் அமையவில்லை. இன்னும் கூறப்போனால் மக்கள் அவர்களை அங்கு வசிக்க விடவிலை. மேலும் வெறியேறும்படி நிர்பந்தித்து விட்டார்கள். இந்த வசனத்திலிருந்து, நம்பிக்கையாளர் விரைவாக தனது இடத்தை விட்டு விடக் கூடாது. மாறாக தப்லீக் செய்து கொண்டிருக்க வேண்டும். அங்கு மார்க்கத்தின்படி அமல் செய்வது சாத்தியமே இல்லாத அளவிற்கு மக்கள் நிர்பந்தத்திற்குள்ளாக்கி விடாத வரை தப்லீக் செய்து கொண்டிருக்க வேண்டும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 169 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யா கேம்பியாவின் ஆன்லைன் சந்திப்பு**
**30 மே 2021**

கேள்வி: இறைவனுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு சிறந்த வழி என்ன? என்று ஒரு சிறுவர் ஹுஸூர் அவர்களிடம் கேட்டார்.

பதில்: ஹுஸூர் இவ்வாறு கூறினார்கள்: சிறந்த வழிமுறை இதுவாகும். அதாவது இறைவன் உங்களை பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதை நீங்கள் எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் செய்வதையெல்லாம் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கின்றான். இந்த விஷயம் உங்களது நினைவில் பதிந்து விடும்போது பின்னர் நீங்கள் தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்வீர்கள். மேலும் எதனை செய்வதற்கு இறைவன் கட்டளையிட்டுள்ளானோ அதனை செய்வதற்கு முயற்சி செய்வீர்கள். மேலும் நீங்கள் செய்யக் கூடாது என்று எந்த விஷயங்களை குறித்து இறைவன் கட்டளையிட்டுள்ளானோ அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்வீர்கள். எனவே நீங்கள் எங்கு இருந்தாலும் சரியே அல்லாஹ் உங்களுடைய ஒவ்வொரு செயலையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதை எப்போதும் நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். நீங்கள் மக்களிடமிருந்து ஒளிந்து கொள்ள முடியும். ஆனால் அல்லாஹ்விடமிருந்து நீங்கள் ஒளிந்து கொள்ள முடியாது. ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் ஐவேளை தொழுகைகளை கடமையாக்கியுள்ளான். நீங்கள் இந்த ஐவேளை தொழுகைகளை தினமும் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு ஈமானில் உறுதியையும், வலிமையையும் வழங்குவதற்காக சஜ்தாவில் துஆ செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பு ஏற்பட்டு விடவும், அவன் உங்களது துஆக்களை ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் நீங்கள் துஆ செய்ய வேண்டும்.

**இந்த சந்திப்பில் ஹுஸூர் அவர்கள் அத்ஃபால் சிறுவர்களுக்கு வழங்கிய சிறப்பான அறிவுரை**

- ♦ அல்லாஹ் உங்களின் ஒவ்வொரு செயலையும் பார்க்கின்றான் என்பதை எப்போதும் கவனத்தில் கொள்ளுங்கள்
- ♦ உங்களுக்கென ஓர் இலக்கை நிர்ணயித்து கொள்ளுங்கள். பிறகு அதனை அடைவதற்கு முழுமையாக உழையுங்கள்.
- ♦ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த நாளை நீங்கள் கொண்டாடாதபோது பின்னர் நீங்கள் உங்கள் பிறந்தநாளை கொண்டாடுவதற்கு என்ன அவசியம் உள்ளது?
- ♦ நீங்கள் காலத்தின் கலீஃபாவின் வழிகாட்டல்கள்படி செயல்படுகின்றீர்களென்றால் அதன் பொருள் கிலாஃபத்தை நேசிக்கின்றீர்கள் என்று பொருள். காலத்தின் கலீஃபாவிடமிருந்து உங்களுக்கு என்ன வழிகாட்டல் வருகின்றதோ அதன்படி செயல்படுங்கள்.

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, ஜூன் 15, 2021)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad